உ

குமரன்றுணை.

அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பரிபூரணம் ௪௱-க்கு சூஸ்திரமாகிய

பூரண சூத்திரம் 216.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்,

மு. குழந்தைவேலுப்பிள்ளையவர்கள்

ஓலையேட்டுப்பிரதியின்படி

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1917

இதன் விலை] — [அணா 8.

உ

கடவுள் துணை.

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

பூரண சூத்திரம் உ௱௰௬.

காப்பு.

ஓடியதோர் தந்திமுகன் றனைப்பணிந்து
உரைத்திடுவேன் பூரணசூத் திரத்தையானுந்
தேடியதோர் மந்திரத்தா லஷ்டசித்தித்
திறமாக வுரைக்கின்றேன் யோகியோர்க்குக்
கூடியதோர் கந்தமதைச் சிதம்பரத்தில்
குணமான காலதனைக் கூட்டிமூட்டி
ஆடியதோர் ஐம்புலனை மூலத்துள்ளே
அமைத்திட்ட மூலகண பதியேகாப்பு. (1)

ஒன்றான பூரணமு மாறுதார
முரைத்ததற்கு மேலாறுந் தொண்ணூற்றாறும்
பண்டான தீட்சைபதி னொன்றும்பெட்டி
பத்துடனே முப்பத்தி ரண்டுதீட்சை
உண்டான சமாதிகற்பம் வாசிநேர்மை
யுறைப்பான சிவயோகம் பிராணாயந்தான்
நன்றான வாதத்தின் தீட்சையோடு
நலமான சவுக்காரத் திறவுகோலே. (2)

திறவுகோல் முன்னுரைத்த நூல்கட்கெல்லாஞ்
செய்பாகம் கைபாகந் தீட்சைபாகம்
அறைகிறேன் சரியையொடு கிரியைமார்க்கம்
அப்பனே முனிசித்தர் நூல்கட்கெல்லா
மறைபுகழாய்ச் சொன்னதெல்லாம் வெளியாய்ப்பாடி
மாட்டினேன் பூரணசூத் திரத்திற்காணும்
இறையளவுந் தப்பில்லை மறைப்போவில்லை
யிருநூற்றுப் பத்தாறு இந்நூல்காணே. (3)

காணப்பா யிந்நூல்போ லொருநூலில்லை
காசினியி லிந்நூலைக் கண்ணிற்காட்டார்
பூணப்பா வைம்பதுக்குள் பூசிர்வித்தை
பூட்டினேன் வயித்தியத்திற் புகழோமெத்த
நாணப்பா வொருநூற்று வைம்பதுக்குள்
நலமான சூட்சத்தை நாட்டினேன்பார்
பேணப்பா முந்நூற்றில் காயதர்மம்
பேசினேன் தீட்சைவிதி யிருநூற்றுள்ளே. (4)

உள்ளான பூசைவிதி யிருநூறுக்கும்
உத்தமனே முந்நூற்றில செந்தூரங்கள்
விள்ளவே ஆயிரத்தி யிருநூற்றுள்ளே
விளக்கினேன் கருவெல்லாம் வெளியாய்ப்போச்சு
எள்ளளவுந் தப்பில்லை மறைப்போவில்லை
யெய்துமென்ற கருவெல்லா மிதிலேயெய்தும்
கள்ளடா கள்ளருக்கு விந்நூலைக்
காட்டாதே பன்னிரண்டுங் காத்தாலேயே. (5)

ஆறுதாரம்.

ஈவதுதா குருக்குச் சிவயோகிக்கு
இகத்திலுள்ள மாண்பருக்கு ஈய்ந்தாயானால்
நோய்பிருந்து சாவாரே சொன்னேன்மைந்தா
நுண்மையாய் மனதில்வைத்து நூணுக்கங்கண்டு
தாய்பதந்தனைப் பூசித்துக் கற்பங்கொண்டு
சமாதிக்கு ளிருந்துரைத்துத் தலைவனாகி
நீமலமே லேறிவிடு லோகத்துள்ளே
நின்றுக்காற் கொல்லுமடா நிசஞ்சொன்னோமே. (6)

மூலாதாரம்.

நிசமான பூரணத்தைச் சொல்லக்கேளு
நின்மலத்தா யென்றனக்கு வுபதேசித்தாள்
வசமான அடிமூலங் கணேசர்கோயில்
வட்டமா மைங்கோணந் திரிகோணத்தில்
எசமான கணேசரொடு வல்லபையுங்கூட்டி
யிருக்குமடா ஓம்ஈம் கிலீயுமென்று
வசமான அங்சிவா (கணபதி)தேவாவென்று
வாழ்த்தடா குண்டலித்தாய் வணங்குந்தானே. (7)

வணங்குவதுக் கிப்படிநீ சக்கரத்தை
வரிசையாய்க் கீறியே யட்சரங்கள்
பிணங்காமல் ஈங்காரம் நடுவேயிட்டுப்
பேரான கோணமைந்தி லைந்துமிட்டு
இணங்கவே தூபமநை வேத்யத்தோடு
இலட்சமுரு வேற்றிடக்குண் டலிதானென்றும்
கணமான கணபதிதான் பிரகாசிக்கும்
கயிலாயப் பரகதியைக் காட்டுந்தானே. (8)

சுவாதிட்டானம்.

காட்டுவது நாற்கோண மதன்மேலப்பா
கருதுவது விருகோண முக்கோணவட்டம்
பூட்டுவது பிரமனொடு சரஸ்வதியுங்கேளு
புகலுவேன நங் மங் ஸ்ரீம் ஐம் அங் பிரமதேவாவென்று
கூட்டுவது லட்சமுரு வேற்றுதற்குக்
குறிசொல்வேன் நாற்கோணம் நாலெழுத்துமிட்டு
நீட்டுவது விந்துவிலே அங்கென்றிட்டு
நிலையாகப் பூசிக்க முத்தியாமே. (9)

மணிபூரகம்.

முத்தியாம் பிறைநடுவே முக்கோணமிட்டு
மூர்க்கமா மகாரமொடு உகாரமிட்டு
பத்தியாம் ஓங்காரம் ஸ்ரீங்காரங்கூட்டிப்
பச்சைவர்ண மூர்த்தியென்றே பகர்ந்துசேவி
சத்தியா மட்சரங்கள் நடுவேயிட்டு
சாற்றுவாய் லட்சமுருத் தானேயாகில்
வெற்றியாங் குண்டலியும் மேலேயேறும்
வேதாந்த பூரணத்திற் சேர்க்குந்தானே. (10)

அனாகதம்.

சேர்க்கின்ற முக்கோண முருத்திரமூர்த்தி
திகழான அறுகோண முன்னேயிட்டு
ஆர்க்கின்ற விந்துவதி னடுவேயிட்டு
அளவான சிகாரமொடு மகாரமிட்டு
பார்க்கின்ற ஸ்ரீங்கார ஓங்காரந்தான்
பகர்கின்ற வகாரமொடு கிலியுங்கூட்டி
தீர்க்கின்ற ருத்திரத் தேவாவென்று
செபிக்கவே வாசியது மேறும்பாரே. (11)

விசுத்தி.

பாரடா லட்சமுரு வேறிற்றானால்
பகருமறு கோணமதில் விந்துவிட்டுச்
சேரடா வகாரமொடு ஓங்காரந்தான்
சிறப்பான ஸ்ரீங்காரஞ் சிவாயநமவென்று
தீரடா மயேசுவர தேவாவென்று
செபித்திடுவா யிலட்சமுரு திறமாய்த்தானே
ஆரடா வுனக்கீடு வாசிசித்தி
யாறெழுத்து மறுகோணத் தறைந்திட்டேனே. (12)

ஆக்கினை.

அறைந்திட்ட மூன்றெழுத்து நடுவேபோடு
அருளான சதாசிவத்தி னருளைப்பாரு
விறைந்திட்ட விந்துவிட்டு நடுவேகேளு
விதமான வைங்கோண முக்கோணந்தான்
உறைந்திட்ட சோடசந்தா னைந்துங்கூட்டி
யுறவான அங்கிஷ ஐம்ஓம்என்று
பறைந்திட்ட சதாசிவதே வாயாவென்று
பகருவே னிலட்சமுரு பரிந்துநோக்கே. (13)

நோக்கடா வைங்கோண மைந்துமிட்டு
நுணுக்கமடா விந்துவுக்குள் முக்கோணத்தில்
ஆக்கடா அம்அங்கிஷ ஐம்ஓமென்று
அப்பனே ஸ்ரீங்கார மிட்டுச்சேவி
மூக்கடா பாயாது வாசிதானு
முக்யமடா மேல்மூலத் தூணிப்பாரு
தாக்கடா அமுர்தமது கீழேபாயும்
நலமான கீழாறு நவின்றிட்டேனே. (14)

மேலாதாரம் அக்கினிமண்டலம்.

ஏனென்ற வாதார மேலேயாறு
மியம்புகிறே னன்றாக வியல்பாய்த்தானே
தேனென்ற சதாசிவத்தின் மேலேகேளு
தீயான மண்டலந்தான் திரிகோணமாகி
வானென்ற மண்டலத்தில் திரிகோணத்துள்
வைத்திடுவா யகாரமொடு சவ்வுந்தானே
கானென்ற மலமறுக்கு மக்கினிமண்டலத்திற்
கண்டிப்பு வற்றுவிடுங் கனலிற்றானே. (15)

கனலிலே வாயுவந்து புக்கிற்றாற்
கண்திறந்து வமூர்தமது கனிந்துபாயும்
புனலான வமூர்தமுண்டால் காயமீறும்
போச்சுதடா நரைதிரையும் புதுமையாச்சு
அனலிலே வெந்ததொரு பாண்டந்தானு
மசையுமோ நீர்தனக்கு வதுபோலப்பா
நினைவிலே யித்தியான மூட்டிமூட்டி
நிச்சயமாய்ச் சமாதிக்குள் நிலைக்குந்தானே. (16)

சூரியமண்டலம்.

நிலையான வழற்குள்மண் டலத்துக்கப்பால்
நேரான சூரியமண் டலத்தைக்கேளு
சிலையான விந்துவடா உகாரமிட்டுச்
செபித்திடுவாய் சூரியனே கோடிகாந்தி
மலையாமல் வாயுவதிற் சேர்ந்ததானல்
மைந்தனே யுன்னுடலிற் பிரகாசத்தைக்
கலையான சூரியனைப் போலாந்தேகங்
கல்மிஷங்க ளில்லையில்லைக் காணுங்காணே. (17)

சந்திரமண்டலம்.

காணுகின்ற சூரியமண் டலத்துக்கப்பால்
கலைமதியாஞ் சந்திரமண்ட லத்தைக்கேளு
தோணுகின்ற சோதியடா மௌனவீடு
சொல்லரிது சொல்லுகிறேன் அங்ஙென்றானு
பேணியே செபித்திடவே சோதிகோடி
பிரகாச மாயிடுங்காண் பெருமைபேசார்
ஆணுவங்க ளற்றதடா அரூபாரூபம்
அட்சரங்க ளற்றவிட மறையக்கேளே. (18)

கேளப்பா ஓங்கார மதன்மேல்நிற்கும்
கொடியான வைந்தும்மேன் றெழுத்துமீதில்
நாளப்பா பஞ்சகர்த்தா'ளைவரீதில்
நலமான ஆன்மாஜீவ கலையுமீதில்
வேளப்பா ஓமென்று தியானஞ்செய்ய
வித்தான பிறவியெல்லா மற்றுப்போச்சு
சூளப்பா பிறவியுமிவ் வளவேயாச்சு
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லப்போமோ. (19)

ஏகாட்சரம்.

போமென்ற பூரணமு மிதுவேயாச்சு
பூரணமாஞ் சூட்சத்தைப் புகலக்கேளு
தாமென்ற அகாரத்தில் உகாரமிட்டு
தனித்துநின்ற ஓங்காரஞ் சுற்றிக்கட்டி
வாமென்ற வஹ்னிகீழ மகாரமிட்டு
மகாரத்தின் மேலேறி அகாரத்துள்ளே
ஊமென்ற றீங்காரம் நடுவேயிட்டு
யுயரவே சூலமிட்டு சிங்கிவங்கே. (20)

வங்கென்று இருபுறமும் வைத்தாயானால்
மைந்தனே சூட்சமது ஏகசூட்சம்
பங்கென்ற பூரணமு மிதுவேயாச்சு
பகருகின்ற மந்திரமு மிதுவேயாச்சு
தங்குமே சடாட்சரமு மிதுவேயாச்சு
தருவான எட்டெழுத்து மிதுவேயாச்சு
அங்குபஞ் சாட்சரமு மிதுவேயாச்சு
ஆதியென்ற மூன்றெழுத்து மிதற்குள்ளாச்சே. (21)

ஆச்சடா தசதீட்சை யிதனுக்குள்ளே
அண்டசரா சரங்களெல்லா மிதனுக்குள்ளே
பேச்சடா வொன்றுமில்லை யிதனையல்லோ
பெரியோர்க ளுரையாமல் மறைத்தாரையா
வாச்சடா ஐம்பூத மிதனுக்குள்ளே
மதியிரவி யானதுவு மிதனுக்குள்ளே
காச்சடா அண்டமொடு புவனமெல்லாங்
கலந்துநின்ற வத்துவிதங் கண்டுகொள்ளே. (22)

கண்டுகொள்ளு மிவ்வெழுத்தைக் கற்பமெட்டில்
காணப்பா பதிற்றுடனே கர்மமாடுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தை யாதாரத்தில்
கர்மமாந் தீவினைகள் காணுதோடுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தை யாதாரத்தில்
கட்டாக வைத்துடனே வாசியேறுங்
கண்டுகொள்ளு மிவ்வெழுத்தைப் பெரியோரெல்லாங்
கட்டினார் நூல்தோறுங் காணுதென்றே. (23)

காணாது ஆணுமல்ல பெண்ணுமல்ல
கருதிப்பா ரலியுமல்ல கருதிச்சொல்லத்
தோணாது வுருவொன்று மரூபாரூபந்
துலங்கிநின்ற பூரணத்தைச் சொல்லிவிட்டேன்
கோணாமல் நின்றவரே குருவைக்காண்பார்
குருக்காணா ராஜிகண்ட குருடராகு
மாணான ஆதார தீட்சையாறு
மப்புறத்தில் நின்றதொரு ஆறுஞ்சொன்னேன். (24)

ஆறாறு பன்னிரண்டு தலமுஞ்சொல்லி
அதில்நிற்கு மட்சரஞ்சக் கரமுஞ்சொல்லி
வறாத வாசியது வற்றஞ்சொல்லி
யேகாட்சர பூரணமு மெடுத்துக்காட்டி
கூறாத கருவையெல்லாங் கூறினேன்யான்
கூற்றநின்ற விடமிதுதான் குறித்துப்பாரு
தேறாத பேருக்குந் தேறுந்தேறுஞ்
சிவசிவா பூரணத்தின் திறந்தான்காணே. (25)

சிவதீட்சை பதினொன்றின் விவரம்.

1-2 தீட்சை.

திறமான தீட்சையது வழியதாகச்
செப்புகிறேன் சிவதீட்சை பதினொன்றுந்தான்
கறவாதே கறந்ததொரு பால்போலப்பா
காசினியோர் பிழைக்கவென்று கருவைச்சொன்னேன்
மறவாதே நீகேளு அம்-உம்-சிம்-வம்-யம்-ஓமென்று
வளர்த்துவாய் முதற்றீட்சை மருவிக்காணும்
நிறைவாக அவ்வும்மவ்வும் ஓம்நமசிவாயாவென்று
நிகழ்த்துவா யிரண்டான தீட்சைநேரே. (26)

3-4 தீட்சை.

நேரான மூன்றாகுந் தீட்சைகேளு
நிச்சயமாய் உம்-அம்-சிவ சிவாயமென்று
வேரான ஓமென்று செபித்தாயானால்
வெற்றியடா மூன்றான தீட்சையாச்சு
பாராய்நீ நாலான தீட்சைகேளு
பகருவேன் சிவாயநம ஓம்ஐயென்று
சீராகச் செபித்திடுவா யைந்தாந்தீட்சை
செப்புகிறே னன்றாகத் தெளிந்துகொள்ளே. (27)

5-6-7 தீட்சை.

துணிவாக வைந்தான தீட்சைகேளு
சிவசிவா அவ்வும்-உவ்வும்-சவ்வும் ஓமென்று
தனிமையா யாறான தீட்சைகேளு
நவிலுகிறேன் மவ்வும்-உவ்வும் நமசிவாயா
குனிர்வாக ஓமென்று செபித்தாயானால்
கூறுவேன் ஏழான தீட்சைமார்க்கம்
எளிதாக கிலீம்-நமசிவாய-அவ்வும் ஓமென்றே
யேற்றுவா யெட்டான தீட்சையென்னே. (28)

8-9 தீட்சை.

எண்ணவே ஓம்-ஐயும்-சிவ அங்கிஷாயா
யென்றுதான் செபித்திடுவா யெட்டாந்தீட்சை
பண்ணவே யொன்பதாந் தீட்சைகேளு
பரிவான சிவாயநம-அம்-உம் ஓமென்று
உண்ணியே யோதிடவே பத்தாந்தீட்சை
யுரைத்திடுவாய் பதினொன்றாந் தீட்சையோது
நண்ணவே மூன்மவுனம் ஏகதீட்சை
நாட்டினேன் பூரணத்தை நயந்துபாரே. (29)

ஆதாரம் பன்னிரண்டின் தீட்சைவிவரம்.

பாரப்பா தீட்சையது பதினொன்றுந்தான்
பரிவான ஆதாரம் பன்னிரண்டுக்கும்
நேரப்பா வொவ்வொன்றுக் கொன்றேதீட்சை
நிறுத்தியே யாதாரம் நிலைத்துப்பாரு
சீரப்பா பன்னிரண்டுக் கொன்றேதீட்சை
செப்பினேன் பூரணத்திற் செப்பினேன்யான்
ஆர்ப்பா தீட்சையொன்றுக் காதாரமொன்று
ஆண்டொன்று தீட்சையொன் றழுத்திப்பாரே. (30)

சத்தி தீட்சை பதினொன்றின் விவரம்.

1-2-3 வாலை தீட்சை.

அழுத்தமாய் சத்தியுட தீட்சைபதினொன்று
மறைகிறேன் உம்-ஆம்-மம் ஓமென்று
வழுத்தவே வாலையுட தீட்சையாச்சு
வரிசையா யிரண்டான தீட்சைகேளு
பழுத்ததொரு யம்-ரம்-அம்-உம்-மம் ஓமென்று
பரிவாக வோதிடவே பலிக்குஞ்சித்தி
எழுத்தாகு மூன்றான தீட்சைகேளு
சம் ஓம்-அம்-உம்-மம் என்றிதனையோதே. (31)

4-5-6-7 தீட்சை

ஓதவே நாலான தீட்சைகேளு
    உம்-மம்-அம்-ஈம் ஊம்-ஓம் என்றோது
நீதமா மைந்தாவ தீட்சைகேளு
    ஸ்ரீம்-ஓம்-மம்-அம்-ஊமென்று இருபையாக
வேதமாம் ஆறான தீட்சைகேளு
    விளங்கவே ஓம்-வம்-ஈம் விதமாய்த்தானே
நீதமா மேழான தீட்சைகேளு
    நிலைத்ததொரு ஸ்ரீம்-ஈம்-அம்-ஊயுமென்றே. (32)

8-9-10 தீட்சை.

என்றுநீ யெட்டான தீட்சைகேளு
    இயம்புவாய் சவ்வும்-அவ்வும்-மவ்வும் ஓமென்று
நன்றுநீ யொன்பதாந் தீட்சைகேளு
    நம்-மம்-சிம்-வம்-ஊம்-ஓம் நலமாய்த்தானே
ஒன்றுநீ பத்தான தீட்சைகேளு
    ஊம்-மம்-சம் ஓமென் றறைவாய்த்தானே
சென்றிடவே பத்தாந்தான் தேவிதீட்சை
    திறமாக தேவிபத்தாந் தெளிந்துபாரே. (33)

11 தீட்சை.

பாரென்றேன் பதினொன்றாந் தீட்சைகேளு
    பகருவேன் ஓம்-றீம்-சம்-மம் என்றேதான்
பூரென்ற பூரணமா மேகதீட்சை
    பூட்டினேன் ஞாதார தீட்சையுள்ளே
நேரென்றேன் பூரணமாம் வாலைதீட்சை
    நிசமுத்தினேன் கண்டுகொள்ளு நிசமதாகத்
தீரென்றேன் தீட்சைபத்து மாதாரத்துள்
    திறமாக வொன்றுக்கு வருடமொன்றே. (34)

தீட்சை கேயிமார்க்கம்.

வருடமாம் தசவருட மாருசெய்வார்
    மைந்தனே சித்தரொடு முனிவர்செய்வார்
பரிஷமா யுலகத்தி லுள்ளபேர்கள்
    பத்திகொண் டலைவார்க ளுரைக்கமாட்டார்
அரிதமா யுரைத்தாலுங் குருக்களாது
    சொல்லுதற்கு வுரைப்பார்கள் நூல்களாது
புருஷமாய் கோர்வைநூல் கட்டாவிட்டால்
    போக்கென்ன வாசையென்ன பொய்யதாமே. (35)

நூலின்மகத்துவம்.

பொய்யாம லிருக்கவென்று லிந்நூல்வேணும்
புகலரிய தீட்சைக்கும் யோகத்துக்கும்
மெய்யான கற்பமுதல் காயசித்தி
விருதான வாதவித்தை குளிகைசித்தி
கையான கைமுறைகள் வாததீட்சைக்
கருவான மறைப்பென்ற சவுக்காரப்போக்கு
உய்யாமல் நூல்களிலே யொளித்தபாக
மொளியாம லெடுத்துரைத்தே னுண்மையாமே. (36)

நூலின்மார்க்கம்.

உண்மையா மிந்நூல்தான் கிட்டாத்தோஷம்
உலகத்தின் மானிடர்க ளுளரிப்போனார்
தண்மையில்லா விந்நூல்யார் கொடுக்கப்போரார்
சாத்திரந்தான் மெத்தவுண்டு சமுசயந்தீரா
வெண்மையாய்ச் சட்டமுனி தீட்சையிருநூறும்
விளம்பினார் வெளியாக வென்றுமூலர்
அண்மையாய்க் கிழித்தாரே ஐயோவையோ
அல்லாம லின்னமொரு ஆகங்கேளே. (37)

சாபவரலாறு.

ஆகமங்கள் பாடுமுன்னே நவசித்தாதி
அதின்பிறகு நவகோடி கோடாகோடி
யாகமுட னச்சுதென்று பேசிக்கொண்டு
பரமசிவன் சாபமிடப் பாவித்தார்காண்
ஏகமாய் சாபமிட்டோம் வாமத்துக்கு
இயலான வட்சரங்கள் தீட்சைமார்க்கம்
போகமா யுயிர்களைத்தான் வாங்கிப்போட்டோம்
போட்டதனால் நூல்களெல்லாம் பொய்யாய்ப்போச்சே

நூல் சுத்தி.

போச்சுதென் றலையாமல் சிவனுத்தாரம்
பூட்டியே கேட்டுநா னிந்தநூலில்
ஆச்சுதென்று மறைத்ததெல்லா மருளிச்செய்தே
னரகரா சாபங்கள் நிவர்த்திசெய்தேன்
மூச்சுதென்று போகாமல் முறைதப்பாமல்
முன்னேதோ பின்னேதோ வென்றெண்ணாமல்
காச்சுதென்று சாய்ச்சிவிட்டே னுலகத்துள்ளே
கண்டவர்க்கிந் நூல்சித்தி முத்தியென்னே. (39)

நாலியாமை.

முத்தியிது மோட்சமிது சித்திகோடி
முக்கியமிது சித்தருக்குங் காட்டொணாது
சத்தியிது சம்புவிது வொன்றாய்ச்சொன்னேன்
சகலநூற் கெல்லாந்தான் குருநூலப்பா
எத்தினோர் சாபத்தை நிவர்த்திசெய்து
ஏத்தினால் தீட்சைதா னெளிதிலாகும்
புத்தியுட னிந்நூல்தா னார்க்குங்கிட்டாய்
புண்ணியர்க்கே இதுகிடைக்கும் பொருளைப்பாரே. (40)

சாபவிர்த்தி.

பொருளான சாபங்கள் நிவர்த்திசெய்யப்
பூட்டினேன் சாபமது தீர்ந்துபோக
அருளான சிவாயநம அம்-உம்-என்று
அப்பனே சிம்-கிலீம்-ஸ்ரீம்-ஓம் சியென்று
மருளாமல் ரம்-மம்-யம்-ஓம் என்றேதான்
மாட்டுவா யிலட்சமுரு வேறிற்றானால்
இருளான சாபங்கள் நிவர்த்தியாகும்
ஏகமாய்ச் சொல்லிவிட்டே னியம்பக்காணே. (41)

வயிரவர் தியானம்.

இயம்புவேன் வயிரவன்றன் தியானங்கேளு
இயல்பாக யம்-நம்-லம்-ஷம் சிங்கென்றேதான்
சயம்பாக ஷங்-வங் மங்கென்றுந்தான்
சாத்தியமாம் வயிரவர் தியானந்தானே
நயம்பெறவே யெண்கோண மிட்டுத்தீரு
நாட்டுவாய் வஸ்துவொடு சுத்திவைத்து
செயம்பெறவே பூசைசெய் வடமாலைசாத்திச்
சித்திக்குஞ் செய்தொழில்கள் திறமாய்த்தானே. (42)

சுப்பிரமணியர்தியானம்.

திறமாக சுப்ரமணியர் செபத்தைக்கேளு
செயமாகு மெந்தனுட குருதானப்பா
அறமாக அம்-உம்-ஓம்-ஸ்ரீம்-யீம்-சம்-வம்-சரவணபவதேவாயா
அறுமுகவா சிவசுப்ர மண்யநமாவென்று
உறவான அறுகோணம் நடுவேவிந்து
உத்தமனே விருத்தமொன்று வாசல்நாலு
நிறமான நால்வாசல் வீரபாகுதேவா
நிச்சயமாய் வைத்துநீ பூசிப்பாயே. (43)

அகஸ்தியர் தியானம்.

பூசிப்பாய் பானமொடு சுத்திவைத்துப்
புகழான சாதிபுஷ்பம் புழுகுபூரம்
ஆசிப்பாய் சுப்ரமண்யர் சித்தியாகு
மப்பனே கேட்டதெல்லா மருளிச்செய்வார்
நேசிப்பா யென்னுடைய தியானந்தன்னை
நினைத்திடவே சித்திவந்து நிலைக்கும்பாரு
வாசிப்பாய் ஓம்-சிம்-வம். அம்-உம் மம்தான்
மகத்தான அகத்தீசர் னென்றுகூறே. (44)

பிராணாயம்.

கூறிடுவா யென்குருவே நந்தியென்று
கோணமுமா முக்கோணஞ் சுழினைமீது
ஏறுவாய் பிராணாயம் வாசியேறும்
இடைகலையாஞ் சந்திரனி லேறியேறு
பேறுபெற வேண்டிலறு லட்சந்தீரு
பிராணாயஞ் சித்தியடா யோகசித்தி
ஆறுடனே யாறுகும் பன்னிரண்டும்
அப்பனே பூரணத்தி லடங்கிப்போமே.

தூலநிலையாமை.

அடங்கினு லாறுதலம் வெளியாய்க்காணு
மதிதமென்ற மேலறுபூ ரணமுந்தோன்றும்
அடங்கினால் சிவயோகந் துடங்கவேணும்
துரியாதீ தந்தனிலே நிற்கவேணும்
அடங்கினால் கூடுவிட்டுச் சீவன்போனால்
சோக்கினதிற் பிறக்குமென்று சொன்னார்முன்னோர்
அடங்கினு லொன்றுமில்லை வருவதேது
அச்சடத்தை வாழ்வித்தா லவனேசித்தன். (46)

பிறவிவருதல்.

சித்தனாய்ப் பிறப்பதுதா னொன்றுக்கால்
செகத்திலே கோடியிலே யொருவனுண்டு
உத்தமொரு விட்டகுறை யென்பதென்ன
வுதித்தகலை யெக்கோர மூணிப்பாரு
பெற்றபே ரெப்படித்தான் வந்ததானால்
பிராணனல்லோ பூரணத்திற் சேர்ந்ததாலே
மூத்ததை யெடுத்தசடஞ் சித்தியாகு
முன்னுமில்லைப் பின்னுமில்லை முறையைப்பாரே ( )

கற்பமுண்ணுமுறைமை.

முறையாகக் கற்பத்தைச் சொல்லக்கேளு
மூதண்ட லேகியமும் அயக்காந்தந்தான்
துறையாக வறுகெணையுங் கழற்றுமுன்பே
சுரிதமாய்க் கொண்டுவிடு மண்டலந்தான்
நிறையாக வல்லாரை வருஷமொன்று
நேயமாய்க் கொண்டபின்பு கடுக்காய்கொள்ளு
அறையாம லதின்பிறகு மிளகுகொள்ளு
அதின்பிறகு கொங்கணர்சொல் முறையைக்கொள்ளே.

வல்லாரைவிபரம்.

கொள்ளுதற்கு வல்லாரை முறையைக்கேளு
குழிவெட்டிக் கறுப்பேற்றிப் பயிரே செய்து
விள்ளுகிறே னிதையெடுத்துக் காடிவார்த்து
வெண்மையெறக் கழுவியே நிழலிற்போட்டு
உள்ளுறவே யுலர்த்தபின்பு யிடித்துத்தூளா
யுத்தமனே புதுக்கலசந் தன்னில்வைத்து
தெள்ளுறவே காடியிலே தின்னவேணுஞ்
செப்புகிறேன் காடிவைக்கச் செய்கையென்னே. (49)

காடிவைப்பு.

என்னவே கருங்குருவை நெல்லைக்குத்தி
இயலான புதுப்பானை தனிற்சமைத்து
வன்னமாய்ச் சுத்தசல மதனில்வார்த்து
வைத்திடுவாய் மண்டலந்தான் வேடுகட்டி
சொன்னதொரு வெய்யிலிலே தினமும்வைத்துச்
சுருதியாய் மறுபானை பகுந்துமூடி
முன்னுள்ள பாண்டத்தை யனலிற்காய்ச்சி
முறையாக வதிலிட்டு சுத்தசலம்வாரே. (50)

காடிமகத்துவம்.

செலம்வார்த்துப் பின்னுமதை ரவியில்வைத்துச்
செய்திடுவாய் மண்டலத்துக் கொருசோறுக
நலமாக வெவ்வேறே பகுந்துகாய்ச்சி
நாட்டியே வெயிலில்வைத்து ஆறுமாதம்
பெலமான காடியிது வல்லாரைக்குப்
பேசாதே யிக்கருவைப் பெரியோர்சொல்லார்
அலையாமல் வல்லாரைச் சூரணத்தை
யழகான புண்ணாக்கா யளவுகொள்ளே. (51)

கொள்ளடா சமாதியிலே யிருக்கும்போது
குருசுப் பூசித்துத் தீட்சையோதி
விள்ளடா வெயிலுடனே காற்றுமாகா
மேனியது வுலவாகா இலேசமாகா
தள்ளடா வெண்ணெய்சுண்ணம் கடுகுமாகா
தாரணியில் பெண்மாய்கை வுள்ளிய
கள்ளடா வாகாது கஞ்சாவாகா
காசினியின் மீன் இறைச்சி யாகாநீக்கே. (52)

அடக்கம்.

நீக்குவது புளியோடு இலையுமுப்பும்
நிலையான வுறக்கமொடு கோபமாகா
ஆக்குவது சுணையாகா பொய்யுமாகா
அப்பனே மனமொன்றாய்ப் புத்தியொன்றாய்த்
தாக்கவரு மாய்கையெல்லா மடித்துத்தள்ளு
சதாநித்தம் பூரணத்தி லகலாமல்நில்லு
போக்குவது பரத்தையே நீ போக்கினுக்கால்
புகழான சிவயோகம் புனிதமாமே. (53)

யோகநித்திரை.

புனிதமா யுறங்கவென்றால் வலக்கைமேலே
பூட்டாகக் கால்நீட்டிப் பூரணத்தைநோக்கி
அனிதமாய்க் கேசரத்தில் மனத்தைவைத்து
அப்பனே லாடத்தே தூங்கவேணும்
மனிதனாய்ப் பிறந்தாக்கால் சாகாக்கல்வி
வாசிக்குஞ் சிவயோக வாழ்க்கைசேர்வான்
செனிதமாஞ் சண்டாளப் பிறலோர்கள்
செத்திறந்து செனிப்பார்கள் செகத்திற்றனே. (54)

கற்பத்துக்குப் பத்தியபாகம்.

செனியாமல் கற்பங்கள் கொள்ளும்போது
திரிகடுகு திரிபலையுஞ் சீரகம்லுமம்
கனியான சாதிக்காய் கிரும்புபத்திரி
கருவேப் பிலையோடு ஆவிநெய்பால்
தனியான சர்க்கரைதேன் வால்குருவையரிசி
சதுரான தூதுவளை புளியாரையோடு
கனியான சிறுகீரை சிறுபயறுமாங்கு
கட்டியதோ ருப்பாகுங் கொறுக்கையாமே. (55)

கடுக்காய்க்கற்பம்.

ஆகுமே சற்பூரச் சிலையின்சுண்ணம்
அண்டமொடு கல்நாருந் தங்கச்சுண்ணம்
வாகுடனே யான்சொன்னேன் மற்றொன்றுமாக
வகையாக இந்தமுறை கற்பங்கொள்ளு
மோகமாய்க் கடுக்காயின் முறையைக்கேளு
முயல்வாகச் செங்கடுக்காய் பொற்காய்வாங்கி
பாகமா யிடித்ததனைச் சூரணித்துப்
பாய்ச்சுதற்குச் சிற்றேரண்டத் தெண்ணெய்வாங்கே. ()

நயனக்குறி.

எண்ணெயது ஆழாக்கடா பொடிதானுழி
இயல்பாக விட்டதனை மைபோற்கிண்டி
கண்ணான பீங்கானில் பதனம்பண்ணி
கனமான புன்னைக்கா யளவுகொள்ளு
விண்ணதனை நித்தநித்தங் கண்ணேட்டம்பார்
வெளிநிற்குஞ் சுழினையிலே வாசியேறுங்
கண்ணதனை முறுக்கியே யேறப்பாரு
கபாலத்தில் அமுர்தமது கனிந்துபாயும். (57)

கபசுத்தி.

பாயுமே சுழினைதனைத் திறப்பதற்குப்
பகருகிறேன் கற்பமொன்று பரிவாய்த்தானே
காயுமே கரிசாலைச் சாறுநாழி
கருதியதோர் நெய்நாழி கலந்துகாய்ச்சி
வாயுமே மெழுகுபதந் தன்னிலேதான்
வடித்துக்கைப் பெருவிரலி லதைத்தடவி
பாயுமே புண்ணாக்கிற் புரளவைத்துப்
பழகவே கபமெல்லா மற்றுப்போமே. (58)

மூலசுத்தி.

அற்றுவிடும் இரண்டுவிரல் வாயுலோட்டி
அனலான கபமெல்லா மகக்குங்கக்கு
மற்றுமினி மூலத்தின் சுத்திகேளு
வாகான குமரிச்சாற் சிற்றேரண்டெண்ணெய்
உற்றதனை முன்போலே காய்ச்சிக்கொண்டு
உறவாக நடுவிரலில் தோய்த்துக்கொண்டு
சுற்றிவிடு மூலத்தின் மலமெல்லாந்தான்
சுகமாகக் கீழ்நோக்கும் சுத்தியாமே. (59)

துறி—மிளகுகற்பம்.

சத்தியா யிருநேரம் நாட்டம்பாரு
சுழித்திறக்கும் பூரணத்தில் சொக்கிப்போமே
பத்தியா யமூர்தங்கொண் டிறந்துபாயும்
பாவிக்கும் இக்குருவைப் பகரலாமோ
வெற்றியா யிக்கினுட கற்பங்கொள்ள
விபரமதைச் சொல்லுகிறேன் விரித்துநன்றாய்
சித்தியாங் கணமிளகாய்த் தெரிந்தெடுத்துச்
சிறப்பான வமுரிதன்னைத் தேத்தாம்வித்தால். (60)

மிளகுசுத்தி—மூதண்டம்.

வித்தாலே முறித்ததனைத் தெளியவைத்து
விதமாக ஐயைந்தாய்த் தினமூமேற்று
முத்தான வமுரியுடன் கொள்ளும்போது
முக்கியமடா நூறுக்கு மதிகம்வேண்டாம்
கொத்தான உஷ்ணந்தான் மிஞ்சிற்றானால்
கூறிலொரு படியாகுஞ் செலத்தினுள்ளே
சுத்தான அறுகின்வேர் பிடிதாவென்று
சொல்லுகிறேன் மிளகுதா னிருபத்தைந்தே. (61)

மூதண்டமகத்துவம்.

அஞ்சாமற் காய்ந்ததுகா னுமுக்கேயானு
லப்பனே பசுவெண்ணெய் பாக்களவுபோட்டு
மிஞ்சாமற் கொண்டிடவே வெப்புத்தீரும்
விருதான கிபாழமிது மெத்தநன்று
நஞ்சுண்ட சிவனன்று கற்பங்கொண்டு
நாதனார் சடைமீது தரித்தகற்பம்
பஞ்சகண பதிமூல வறுகீதப்பா
பார்த்தாக்கா லிதன்பெருமைப் பகரொண்ணாதே. (62)

மறுகற்பம்.

ஒன்றான அயக்காந்தங் கொண்டபின்பு
உத்தமனே யறுகவையுங் கழற்றிப்போடு
கன்றான வல்லாரை கடுக்காயோடு
கனமான மிளகோடு மறுகற்பங்கொள்
நன்றான சட்டைமுனி சொன்னமார்க்கம்
நலமாகக் கொண்டுவிடக் காயசித்தி
விண்டான கெவுனசித்தி யோகசித்தி
வேண்டியதோ ரட்டமா சித்தியாமே. (63)

கற்பமுண்ணுமுன் பக்குவம்.

ஆமென்ற மூலியெல்லாங் கறுப்பேற்றிக்கொள்
அப்பனே உன்தேகம் பெலத்துப்போச்சு
ஓமென்ற கற்பங்க ளுண்ணும்போது
உடலிலே நோய்வந்தால் மூன்றுநாளே
தாமென்ற செந்தூரம் லேகியங்கள்
தப்பாமற் செய்துவைத்துப் பின்னேகற்பம்
நாமென்று நோய்கள்வந்தால் செந்தூரத்தை
நாட்டிடவே நோய்தீரும் நளினமாமே. (64)

கற்பமுண்ணுங் காலம்.

நளினமாய்க் கற்பமுண்ணுங் காலந்தானும்
நலமான கார்த்திகைமார் கழியுமப்பா
அளிவான சுவைதன்னி வல்லாரைகொள்ளு
சுகமான கபிக்காய்தான் ஆனிமாதம
அழியாம லானியிலே யிளகுகொள்ளு
அப்பனே யுதையத்திற் சரீரசுத்தி
ஒளியாமல் கட்டளைய முடிந்துக்கொண்டு
உதையாதி மூன்றுக்குங் கற்பங்கொள்ளே. (65)

பத்தியமுண்ணுங்காலம்-கலை.

கற்பந்தான் தின்பதற்கு முன்னேமுக்கால்
கடந்தபின்பு பத்தியங்கொள் கனலேறுது
உற்பனமாங் கற்பத்தைச் சூரியனிற்கொள்ளு
உண்பதுவு முறக்குவது மொன்றேமார்க்கம்
நற்புடனே பூசைசெய்வார் காலமூன்றும்
நாளொன்றுக் கிருநேரம் நாட்டம்பாரு
சொற்பமென்ற பெண்ணாசை விட்டாலுந்தான்
சுகமான சயனத்தில பெண்தான்வந்தே (66)

சயனமாயிகை-வாசிதுறி.

வந்துதான் மருவிடவே விந்துவீழு
மகத்தான தபமெல்லா மழிந்துபோகுங்
கொந்துதா னழியாமல் நின்னவைத்தாங்கு
குழியான புருவமையங் குறியைப்பாரு
வெந்துதான் போகுமடா மூலத்தீதான்
மேற்கொண்டால் மாயையெல்லாம் வெளியுமாகும்
உந்திதான் பசியாம லிருக்கவென்று
துறைப்பான வாசிகொண்டு வமுர்தமுண்ணே. (67)

கற்பமுண்ணை-அறிவு.

உண்ணுவது சாதகமாய்த் தள்ளவேணு
முற்றஅறு சுவையதனை நீக்கவேணும்
பண்ணுவது சிவயோகம் பண்ணவேணும்
பார்வதியுஞ் சிவனுடைய தீட்சைவேணும்
எண்ணுவது மிதுக்கெல்லா மிந்நூல்வேணு
மிறவாம லிருக்கவென்றால கற்பம்வேணும்
கண்ணுவது கற்பமுண்ணப் பாத்திரங்கள்
காந்தத்தி னருமைதனைக் காட்டுறேனே. (68)

காந்தபாத்திரப்பெருமை.

காட்டுகிறேன் காந்தமது முந்நூற்றுள்ளே
கலந்துரைத்த படியுருக்கிக் கருவில்வாரு
மூட்டுகிறேன் கிண்ணியைப்போல் வார்த்துக்கொண்டு
முனையான கிண்ணியிலே பாலைவார்த்தால்
ஆட்டுகிறேன் பொங்கியது மேலேநிற்கு
மப்பனே காந்தத்தி னதிகம்பாரு
நாட்டுகிறேன் தயிர்போலா மந்தப்பாலை
நலமாகக் கொண்டிடநோய் நாடாதென்னே. (69)

நாடாத கிண்ணியிலே கற்பமுண்ணு
நலமான வமுதுண்ணு பாலுமுண்ணு
தேடாத நெய்தேனு முண்ணலாகுந்
தினந்தோறுங் கொண்டாக்கால் சித்தியாகும்
ஓடாது விந்துவது கீழ்நோக்காது
உறக்கந்தா னுறுலுங் கட்டிப்போகும்
கூடாத சித்தியெல்லாங் கூடுங்கூடுங்
குறிப்பான ரசமணியின் கூறுகேளே. (70)

ரசமணி.

கூறான காந்தத்தின் கிண்ணத்துள்ளே
கொட்டியதோ ரசத்தையின்னங் கூறக்கேளு
வீறான கருமத்தஞ் சாறுவிட்டு
வேகிறதோர் சுடுசோற்றுக் குள்ளேவைத்தால்
வேறான வானைவீ றிட்டுச்சாகும்
வெள்ளீயம் போலுந்தான் வலுத்துப்போகும்
பேறாக வெடுத்துமணி பதினாறுக்கிப்
பேணியே செபஞ்செய்ய யெட்டுமாமே. (71)

மணித்தொழில்.

ஆடுகிற மணியதனை சாரணையிற்றீர்ந்தா
லண்டரண்டஞ் சுத்திவருங் கெவுனமாகுங்
கூடுகின்ற பெண்ணோடே வாயிலிட்டால்
குடிகெடுத்த விந்துவது கட்டிப்போகுந்
தேடுகின்ற தேட்டெல்லாம் ரசமணிதானப்பா
தேடவென்றால் காந்தத்தின் கின்னைக்கின்னம்
ஓடுகின்ற வோட்டெல்லாங் காந்தத்தாலே
உத்தமனே கற்பதனுக் குறுதியாமே. (72)

அருளீதல்.

ஆயிந்த வுறுதிசொல்லார் சித்தரெல்லா
மாதிதொடுத் தந்தவரை யழகாய்ச்சொன்னேன்
ஓயிந்த நூல்போலார் வெளியாய்ச்சொன்னா
ரொளித்திட்டார் சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
நாயிந்த நூலவழியாய்ச் சொன்னதென்ன
நாட்டிலுள்ளோ ரெல்லோரு மாண்டுபோனார்
சாயித்தப் படியானால் தோஷமென்று
தாக்கினேன் பூரணத்தில சாயுச்சியந்தானே. (73)

சமாதிகட்டும்வகை.

சாயுச்சிய மாவதற்குச் சமாதிசேரு
சஞ்சார சமாதியது மவுனிக்காகும்
நீயுச்சிய மாசவென்றால் கருவைக்சேரு
கினைத்தருகை யாதாரம் போதுண்டாக்கி
மாயுச்சிய மாயதிலே பற்பம்போட்டு
மைந்தனே யதிலிருந்து கற்பமுண்ணு
வாயுச்சிய மானதொரு யோகம்பாரு
வளமான சித்திவந்தால் மலையிலேறே. (74)

சித்தராகும்பருவம்.

ஏறியே யென்னைவந்து கண்டாயானா
லியலான சித்தனென்று பேருமீய்வோம்
மாறியே மலைகளிலே சித்தர்கோடி
மாறாட்டஞ் செய்திடுவார் மருவவேண்டாந்
தேறியே பொதிகையிலே முன்னேவந்து
சித்தனென்று பேர்வந்து முத்திரையும்வாங்கி
ஏறியே மலைகளிலே நடக்கலாகு
மித்தனைக்கும் வருவதுதான நுமைதானே. (75)

சிவவேடவகை.

அருமையென்ற சிவயோகம் வந்ததானா
லதிகமாஞ் சித்தருக்கு ரூபங்கேளு
பெருமையென்ற சட்டையொன்று பிரம்பொன்று
பேரான படிகமணி குண்டலத்தினோடு
தருமையென்ற வுப்பினுடை சரந்தான்கையில்
சட்டையுண்டு கயிலாய வர்க்கமானால்
அருமையென்ற விபூதியுற் றளமூ மாகி
யப்பனே யோகதண்டு முத்திரைகாணே. (76)

அகஸ்தியர்வேடம்-மூலகுருவேடம்.

நம்முடைய முத்திரைதா னிடைகாஷாயம்
நாதனுட முத்திரைதான் சிரசிலாகுந்
தம்முடைய வர்க்கத்திற் படிகலிங்கந்
தரிவான கமண்டலமுந் தரிப்பார்பாரு
அம்முடைய தீட்சைவிதி யோகமார்க்க
மானந்த மூலகுரு வேடம்பாரு
கும்மென்ற மேருவுக்குத் தெற்கேகேளு
கோடான கோடிசித்தர் கூடினாரே. (77)

சித்தர்களிடம்-உருவு.

நாலுமேரு திக்கிலுள்ள சித்தர்ரூபம்
கூடினார் மேற்கிலுள்ள சித்தர்கோடி
கூர்ப்பான வயதிருபத் திருநூறப்பா
தேடினால் வளர்த்திமுழம் நாற்பதாகுஞ்
சித்திக்கு மேருவுக்கு வடக்கேகேளு
நாடினால் வளர்த்தியது நானூறாகும்
நலமான மூன்றுதிசை சித்தருக்கு
ஊடினார் கிழக்கதிலே வுரைக்கக்கேளு
உத்தமனே வளர்த்தியது நானூற்றெண்ணே. (78)

நூறாகும் வயததுதான் முன்னிரட்டி
நூதனமா யிருப்பார்கள் கோடாகோடி
பேறாகுந் தெற்கிலுள்ள சித்தரெல்லாம்
பெருமைமெத்தப் பெருமைமெத்தப் பேசப்போகா
ஆறாகும் நாலுதிசை சித்தருக்கு
அடையாள மென்னுடைய காஷாயந்தான்
வீறாகுஞ் சித்தருக்கு மகத்துவந்தான் மெத்த
மெய்ஞ்ஞானி சொரூபமடா விரைந்துபாரே. (79)

பூசைவிதி-பிராணாயம்.

விரைந்துகற்ப முண்ணயிலே முடிவளர்க்கவேண்டாம்
விடிவேரு பல்விளக்கி நாக்குத்தேய்த்து
திரைந்துவரும் வழலைசுத்தி மூன்றுஞ்செய்து
திருநீற்றை யுற்றனமா யணிந்துகொண்டு
பரந்தஆம் கன்யாசம் கரனியாசம்
பரிவான சடங்கமது பிராணாயந்தான்
உரந்துவரும் காயத்திரி தர்ப்பணமுமோமம்
உரும்வற்று மட்டகர்மஞ் சிவபூசையாமே. (80)

புத்தி.

பூசையிலே வைத்தெடுத்துக் கற்பமுண்ணு
புகழாகச் சித்திக்கும் பேறுண்டாகும்
ஆசையிலே பேரின்ப மடுத்தாயானு
லற்பமன தின்மாய்கை நீக்கிப்போடு
வேசியைப்போ லாசைகொண்டா லெல்லாம்போச்சு
வேதாந்தம் நீயென்றுமேலோர் மனதாய்நில்லு
காசில்லை யென்றுசொல்லி விட்டிடாதே
கற்பமுண்டால் வாதசித்தி கைக்குள்ளாமே. (81)

சுத்திமார்க்கம்.

கைக்குள்ளாய் வாதசித்தி வருகவென்றால்
கருவையெல்லாஞ் சொல்லுகிறேன் கனிந்துகேளு
மெய்க்குள்ளா யைம்பதுக்குள் சொன்னேன்முப்பூ
வெளியாகச் சொல்லிவிட்டேன் சுத்தியில்லை
முக்கியமாஞ் சுத்திதனைச் சொல்லக்கேளு
முப்பத்திரண்டென்று கொங்கணர்தான்சொன்னார்
தொக்கிலே சொல்கிறேன்நீ கேளுகேளு
சுத்தியுட சுப்பிரத்தைச் சுருக்கிததானே. (82)

முப்பூசுத்தி.

சுருக்கியே சொல்லுகிறேன் முப்பூவப்பா
தூக்குவாய் வகையொன்று பலமொன்றாகச்
செருக்கியே பனிவிளைந்த நீரைவாங்கித்
தெளித்துநீ வைத்திடுவாய் வெவ்வேறாக
நெருக்கியே வெய்யிலிலே காயக்காய
நேராக வொன்றுக்குப் பத்துநாள்தான்
தருக்கியே வகையொன்று சலம்படிதானென்று
தாக்கியே வெய்யிலிலே காய்ந்தபின்னே. (83)

காய்ந்ததின்மே லின்னமொரு சுத்திகேளு
　　காசினியி லமுரியினால் முன்போற்காய்ச்சு
வாய்ந்தபின்பு தேசியின்னீர் தன்னில்முன்போல்
　　வளமான சாரநீர் தன்னில்முன்போல்
ஏய்ந்தபின்பு முப்பூவு மொன்றாய்ச்சேர்த்து
　　இதமான கிளிஞ்சினீர் படிதான்வாங்கி
பாய்ந்திடவே பத்துமுறை தெளித்துநீயும்
　　பரிவாக வற்றவற்றத் தெளியக்காய்ச்சே. (84)

வெடியுப்புச்செயநீர்.

காய்ச்சியபின் இன்னமொரு கருவைக்கேளு
　　கனமான வெடியுப்புப் புளியுங்கூட்டி
வாய்ச்சுதே யிடித்துநன்றாய்த் தீயைமூட்டு
　　வளமாக நீற்றியிதைச் சுண்ணாம்பாக்கிப்
பாய்ச்சுவாய் நாலிலொன்று சாரந்தானும்
　　பரிவாகப் பொடித்துநன்றாய்ப் பனியில்வைக்க
ஆய்ச்சியாஞ் செயநீரா மந்நீர்தன்னை
　　அரைப்படிதான் வாங்கிவைத்து அறையக்கேளே. (85)

முப்பூச்சுண்ணம்.

கேளப்பா வீரமொடு பூரஞ்சீனங்
　　கெடியான வுரமுடனே குருவண்டுநாபி
சூளப்பா வகையொன்று கழுஞ்சியொன்று
　　கூட்டியே பொடித்தரைத்த நீரிற்போடு
நாளப்பா இருந்துடனே சிவந்துபோகும்
　　நலமான செயநீரில் போட்டுக்காய்ச்சு
தேளப்பா கொட்டியதோர் சுண்ணமாச்சு
　　திடமாக இடைக்கிடைதான் சூடன்சேரே. (86)

சூடச்சுண்ணம்.

சூடனுக்கு நேர்பாதி வீரங்கூட்டிச்
　　சுகமான புழுகதிலே கழுஞ்சுகூட்டி
தேடுகின்ற வெடியுப்பு நீராலாட்டிச்
　　சிறப்பாக வில்லைசெய்து ரவியிற்போடு
நாடவே காய்ந்தபின் போட்டில்மூடி
　　நலமாகச் சந்துவாய்ச் சீலைசெய்து
போடவே முழப்புடத்திற் சுண்ணமாகும்
　　போக்கதிலே சொல்லுகிறேன் புகழ்ந்துபாரே. (87)

துரிசிச்சுண்ணம்.

புகழான சுண்ணத்தில் மஞ்சாடிவாங்கிப்
பூசுவாய் துரிசிக்கு வாய்நீராலே
சுகமான வெய்யிலிலே காயவைத்துச்
சொல்லுகிறேன் பூநீற்றில் சீலைசுற்றி
அகமான வோட்டில்வைத்து வோடுமூடி
அப்பனே சந்துவாய் சீலைசெய்து
மூகமான மூன்றெருவில் புடத்தைப்போடு
முக்கியமாய் நீறும்பின் பெடுத்துக்கொள்ளே. (88)

தாளகச்சுண்ணம்.

எடுத்ததொரு துரிசினீர் வேகமெத்த
என்சொல்வே னிரதத்தைச் சுண்ணிக்கொள்ளு
அடுத்ததொரு துரிசினீர் வீரங்கூட்டி
அழகான தாளகத்தி லப்பிப்போடத்
தொடுத்ததொரு தடத்தினிலே வெளுத்துநீறுஞ்
சுகமான வுபரசங்க ளியமாகும்
கொடுத்திடவே பத்தரையுந் தப்பாதப்பா
கோடான கோடிகவ ராடும்பாரே. (89)

நூலின்பெருமை.

ஆடியதோர் முப்பூவின் கருவையெல்லா
மறைப்பற்றுச் சொல்லிவிட்டே னலையவேண்டாம்
தேடியதோர் கருக்களெல்லாம் வெளியாய்ப்போச்சு
செகத்திலே கிட்டுகிலோ சித்தராச்சு
மூடியதோர் கருவெல்லாந் துறந்தேனென்று
மோசமென் றிந்நூலை யொளித்திட்டார்கள்
நாடியே நானெடுத்துப் பாவநாச
நற்றீர்த்தக் கரைதனிலே வைத்திட்டேனே. (90)

நூல்வந்தவழி.

வைத்திட்ட நூலெடுத்தா னொருவேளாளன்
வந்ததடா இப்படித்தா னுலகத்துள்ளே
கைத்திட்ட மானபல விந்தநூல்தான்
கசடருக்கும் பாவிகட்குங் காணுதோடும்
பொய்த்திட்ட சாத்திரங்க ளெல்லாமெய்தான்
போக்கரிய விந்நூலைப் பேணிப்பாரு
எய்த்திட்ட கருவெல்லாந் தோயுந்தோயு
மீசுரனுந் தேவியுந்தா னிறைஞ்சுவாரே. (91)

சவுக்கார வைப்பு.

இறைஞ்சவார் சவுக்கார வைப்பைக்கேளா
　　யியலான உவருப்பு அமரியுப்பு
மறைவான கல்லுப்பு வெடியுப்போடு
　　மருவியதோர் கல்லீரனைக் கிளிஞ்சிற்சுண்ணம்
நிறமான சூடனொடு பாரையுப்பு
　　நேராகச் சட்டைமுனி கொங்கணர்தான்சொன்னார்
குறையாம லம்முறைக்கு வைத்துக்கொண்டு
　　கூசாமல் சட்டைமுனி சொன்னமார்க்கம். (92)

சொன்னபடி யெண்ணெய்தனைக் கழற்றிப்போடு
　　சூட்சமாய்க் கடுங்கார மேற்றியேதான்
நன்னயமாய்க் கல்லுப்பைக் கூட்டிக்கொண்டு
　　நலமான வித்தையெல்லா மாடிப்பாரு
பொன்னதிலே யுண்டாகுங் குளிகைகட்டிப்
　　பொதிகைதனில் வந்தென்னைக் கண்டுசேவி
இன்னமொரு சேதியுண்டு சொல்லக்கேளு
　　இதமான வறுசுவையுங் கழற்றுவாயே. (93)

சுந்தரானந்தர் முறைகற்பம்,

கழற்றுவாய் சுந்தரன்றந் நூலைப்பார்த்துக்
　　கடுக்காயைக் கொண்டுவிடு வருஷமொன்று
தளத்துடனே மிளகுதனைக் கொண்டாயானால்
　　சடத்திலுள்ள நோயெல்லாந் தானேபோச்சு
சுழற்றுகின்ற நூல்களெல்லாஞ் சுருக்கிச்சொல்வேன்
　　துடியான வல்லாரைக் கற்பத்தேதான்
இளைத்துநீ போகாமல் வருடங்கொண்டா
　　விருப்பாயே இருநூறுண் டிருந்துகாணே. (94)

குளிகைசெய்கை,

ஆண்டிருக்கச் செய்துகொண்டு வயக்காந்தத்தை
　　யப்பனே கொண்டுவிடு வருடமொன்று
பூண்டிருக்கும் பிறகுகொள்ளு கற்பமெல்லாம்
　　புகழாக முப்பூவை முடித்துக்கொண்டு
என்றதொரு வேதைதனைக் கண்டுகொண்டு
　　இரதமென்ற ஆனைதனைக் குளிகைசெய்து
மூன்றதொரு குளிகைக்குச் சாரனைதான்றீர்க்கு
　　முன்பாகத் தங்கமொடு சூதங்கூட்டே. (95)

இரசச்செந்தூரம்.

கூட்டியே செந்திதனைக் குப்பிக்கேற்றி
குலாவியே செந்தூரஞ் செய்துகொண்டு
நாட்டியே வருடமொன் றுகொண்டாயானால்
நமனில்லை கோடிவரை யிருத்தும்பாரு
பூட்டியே வாசிதன்னைக் கூட்டிக்கொண்டு
புதுமையுள்ள மலைமேலே யேறியேதான்
ஆட்டியே மலையிலுள்ள கற்பங்கொள்ளு
அதிகமாய் ரிஷிகளைநீ தெரிசிக்கேதான். (96)

சித்தரைக்காணத்தியானம்.

அடுக்தும்வகை,

தெரிசிக்கத் தியானமொன்று சொல்லக்கேளாய்
சிவாயநம ஓம்-கிலீம் என்றுசேவி
வரிசிக்குஞ் சித்தரெல்லாம் வெளியிற்காணு
மகத்தான சித்தரப்பா வணங்கிநில்லு
பரிசிக்கும் படியவரைக் கண்டாயானால்
பணிந்திடுவாய் பாதத்திற் சிரசுதட்ட
கிரிசிக்கும் ஆர்நாவிற் சார்ந்தாயென்று
கேட்கிலகத் தீசுரர்தன் கிருபையென்னே. (97)

சித்தர்மகத்துவ மளித்தல்.

என்னுடைய பேர்சொல்லிக் கூட்டிக்கொண்டு
இசையான பொதிகையிலே யேறுவார்பார்
உன்னுடைய திறங்கண்ட போதுதானே
யுறுதியுள்ள சித்தனென்று பேருமீய்வேன்
மின்னுடைய வொளிகாட்டி யறுதலமுங்காட்டி
மெய்ஞ்ஞான வீடுபெற நிலையுங்காட்டி
பன்னுடைய சிதம்பரமு மேருபூசை
பாலிப்போ மஷ்டாங்கம் பரிக்துகாணே. (98)

யோகிகளுக்கிருப்பிடவிசேடதலம்.

பரிவான யோகிக்குத் தலத்தைக்கேளாய்
பகருவேன் காசிவரை கன்னிமட்டும்
தெரிவான மலைச்சார்பு மெத்தநன்று
தேசத்தில் நாடதிகஞ் சோழதேசம்
அரிவான பாண்டியிலே வைகைநாடு
அடுத்ததொரு கள்ளர்பத்து அழகர்கோவில்
உரிதான திண்டுக்கல் காளையார்கோவி
லுறவான மதுரையொடு குன்றூருமே. (99)

ஆறான தாம்பிரவேணி கரைப்போக்கெல்லா
மாமடா வெகுசித்தி பொதிகைச்சார்பு
கூறான சிதம்பரமுங் காவேரிப்போக்கும்
கொள்ளுகிற கற்பமெல்லாஞ் சித்தியாகும்
நூறான கன்னியிலே குமரிநின்றால்
நற்பமாய் வாலையடா அவள்தானப்பா
பேறாகும் நான்சொன்ன தலங்களுக்குப்
பேதமில்லை பேதமுண்டு பேசுறேனே. (100)

பேதபூமி.

பேசுவது சமுத்திரத்துக் கப்பாற்பத்துப்
போரான கடிகையது மேற்கேசென்று
வீசுறதோர் கற்பங்க ளுண்ணவேணும்
மெய்ஞ்ஞானிக் கெங்குமாம் வேதாந்திக்கும்
ஆசுறதோர் தலமதிகம் நிலமதிகம்பாரு
அப்பனே குளிர்ந்ததல மாகுமாகுங்
கூசுறதோ ரென்னவென்றால் ராசதீதங்
குவலயத்தில் மனுநீதங் கொள்கைபாரே. (101)

புத்தி.

பாரப்பா சமாதியிலே யிருக்கும்போது
பலபலவாந் தொழில்முறைகள் செய்யும்போது
நேரப்பா பலகூட்டங் கூடலாகா
நெறிகெட்ட சீடர்களைச் சேர்க்கலாகா
ஆரப்பா தனியேதா னிருந்துகொண்டு
அளவறந்த வித்தையெல்லா மாடுமாடுஞ்
சீரப்பா தேகசித்தி யோகசித்தி
செயமான மலைகளிலே சேர்ந்துகொள்ளே. (102)

பூமிநாதம்விளைபூமி.

கொள்ளென்ற குமரிக்கு மேற்கேகேளாய்
கூறுவேன் பதின்காதங் குணமாய்பூமி
விள்ளென்ற பூமிதனிற் பூமிநாதம்
விளைந்தெடுக்குந் தலங்களையான் விரித்துச்சொல்வேன்
உள்ளென்ற காசிக்குந் தெற்கேபத்து
உறவான கடிகைக்குட் பூமியொன்று
எள்ளென்ற பூமிக்குக் கிழக்கேதாறு
மிருபதுநா ழிகைக்குள்ளே தலமொன்றுண்டே. (103)

உண்டப்பா முன்சொன்ன தலத்துக்கப்பால்
யோசனைதா னொன்றுசென்றால் தலமொன்றுண்டு
நன்றப்பா வதின்பிறகு மேற்கேசென்றால்
நலமான கடிகைபத்து மலைச்சார்புக்குள்
சென்றப்பா பார்த்தாக்கால் தலமொன்றுண்டு
சித்தருட நடமாட்டஞ் சொல்லப்போகா
இன்றப்பா சொல்லுகிறேன் விலாடபுரந்தன்னில்
வெகுவிதி யொருதலந்தான் விசாலமெத்தவாமே. (104)

தலவிசேடமகத்துவம்.

மெத்தவடா டில்லிக்கு மேற்கதாக
விருதான தலங்களுண்டு மேவிப்பாரு
சித்தரப்பா கஞ்சமலைச் சித்தர்வாழ்க்கை
திரண்டதொரு மலையுண்டு வதற்குள்ளப்பா
உத்தமமாங் குருநாட்டில் ஞாலந்தானென்று
உயர்ந்தமலை யதுதானே சித்தருக்கு
வெற்றியுள்ள கன்னடியர் தேசந்தன்னில்
மேலான வயிந்தநகர் தலந்தானென்றே. (105)

தலமான ஆற்காட்டின் மேற்கேபத்து
சார்ந்தக்கா லங்ஙனே தலமொன்றுண்டு
பெலமான காவேரி பூமிதன்னில்
பெருத்ததொரு தலமொன்று சீரங்கத்தில்
நிலமான கோகர்ணத்துக் கப்பாலேதான்
நெடுந்தூரஞ் சென்றாக்கால் தலமொன்றுண்டு
குலமான திண்டுக்கல் தேசந்தன்னில்
குணமான தலமொன்று கூர்ந்துபாரே. (106)

கூர்ந்துபார் கள்ளருட தேசந்தன்னில்
குணமான தலமொன்று வள்ளலூரில்
சேர்ந்துபார் மதுரைக்குத் தெற்கதாகத்
திறமான கடிகைபத்துக் கப்பாலொன்று
வார்ந்துபா ரதற்கப்பால் கடிகையைந்து
எல்லையிலே தலமொன்று இருக்கும்பாரு
தீர்ந்துபார் மதுரைக்குக் கிழக்கேயப்பா
சேர்ந்துபத்துக் காதத்துக் கப்பாற்செல்லே. (107)

செல்லவே வளையல்செய்யும் பேர்களுண்டு
செயமான தலமதிகஞ் சேர்ந்துபாரு
மெல்லவே யதின்கிழக்கு மறவர்நாட்டில்
வெகுதலங்க ளுண்டுசமுத் திரம்வரைக்கும்
நல்லதொரு கல்லுப்புக் கடலிலுண்டு
நலமான சமுத்திரத்தின் ஸ்ரீராமர்பிரதிஷ்டை
வல்லதொரு நாட்டுக்குள் தலமொன்றுண்டு
மைந்தனே தாம்பிரவேணி வளமைகேளே. (108)

பூற்றின்கரைப் பூமிவளமை:

வளமையா மாற்றினுட கரைப்போக்கெல்லாம்
வாகான நாலாறு தலங்களுண்டு
இளமையா மதின்தெற்குக் குமரிவரைகேளாய்
ஏழுதல மூண்டப்பா வதற்குமப்பால்
பளமையாங் குறவருட தேசந்தன்னிற்
பதிவான தலமுண்டு கிட்டக்கிட்ட
உளமையாந் தலங்கள்ரொம்ப ஈதல்லாமல்
உறைப்பான பூவெல்லா முற்றப்பாரே. (109)

சலாசத்து—பொன்னப்பிரகம்—வெள்ளை
அப்பிரகப்பூமி.

பாரப்பா சலாசத்து விளையும்பூமி
பரிவான குமரிக்குங் கிழக்கதாக
நேரப்பா காதமது பத்துச்சென்றால்
நிலத்திலே வெட்டியே யெடுப்பார்பாரு
சீரப்பா பொன்னென்ற வப்பிரகந்தான்
தென்காசிக் கடுத்ததிலே தலந்தானொன்று
வோரப்பா வெள்ளையென்ற வப்பிரகந்தான்
விரிசதுர கிரிக்கடுக்க விளையும்பாரே. (110)

பொன்னிமிளை—மூவிலைக்குருந்து—சோதிவிருட்சம்
வெண்சாரை.

விளையுமடா கிழக்காகக் காதமூன்றில்
வெகுவிதமாம் பொன்னிமிளை விளையும்பூமி
தளையுமடா பொதிகைமலைச் சார்புதன்னில்
தாம்பிரவே ணிக்கரையி லருவியாற்றில்
மூளையுமடா வதனடுத்த தெற்கேகாத
மூவிலையாங் குருந்துதான் மரமுண்டாகுந்
தளையுமடா வதினடுவே சோதிவிருட்சந்
தன்னோடு வெண்சாரை தானுமுண்டே. (111)

வெண்ணாவல்.

உண்டடா பச்சையா றநணிலப்பா
    யுத்தநம்பி வாசமலை யுயர்த்திமெத்த
நன்றடா வதினுடைய கரையிலேதான்
    நாலாறு மரம்நிற்கும் வெண்ணாவலப்பா
கொண்டடா வம்மலையில் சித்தர்கூட்டங்
    குறையாது வொருநூற்றுப் பத்துப்பேர்கள்
கண்டடா வம்மலையில் விருட்சமூலி
    கனமடர் சித்தரால் காணொணாதே. (112)

நீலக்கொடிவேலி-சங்கிலிச்சித்தர்வாசம்.

காண்போர்க ளம்மலையிற் கிணறொன்றுண்டு
    கருநீலக் கொடிவேலிக் கரையிலுண்டு
வீண்போர்கள் போனாக்கால் காணாதப்பா
    விருதுபெற்ற சித்தர்கடான் போகவேணும்
தாண்பான மயேந்திரமா மலையிலேதான்
    சங்கிலிச்சித்த ருண்டுகொங்க ணர்தன்பிள்ளை
ஊண்போர்கள் போனாக்கா லேறப்போகா
    உறப்பான கெவுனிக்கு வறலாமே. (113)

வெண்சாரைவாழுமிடம்-வெண்சாரையைக்காணுமிடம்.

ஆகுமே தாடகைதன் சுனைதானொன்று
    அதில்வாழும் வெண்சாரை யஞ்சாறுண்டு
போகுமே யச்சாரை மயேந்திரமலையெல்லாம்
    போக்குவரத் தாயிருக்கும் பூண்பார்சித்தர்
ஏகுமே யம்மலையி லேறிச்சென்று
    வியல்பான சுனையருகில் மண்டலந்தானொன்று
வாகுமே தானிருக்கும் போதுதன்னில்
    வருத்ததிலே காணலாஞ் சாரைதன்னை. (114)

சாரைபிடிக்குமுறை-வெண்சாரையருந்தல்.

தன்னையே கண்டவுடன் ரம்பித்தேதான்
    சார்வான நடுமையம் பிடித்தாயானால்
பின்னையே பிடித்தவிடங் கையிருக்கப்
    பேராக விருதுண்டாய்ப் பொருந்திப்போகும்
மின்னையே கையிலிருக்கு மதனைத்தின்று
    விருபதுனா யிரம்வருட மிருத்தும்பாரு
பொன்னையே தேடாதே கற்பந்தேடு
    பொருள்காணப் புருவமையம் நோக்கிப்பூணே. (115)

சதுரகிரிமகத்துவம்.

பூணப்பா மயேந்திரத்தி லேறித்தெற்கே
போக்காறல் நாழிகைதான பொன்மலைதானுண்டு
ஆணப்பா வதனிலொரு குகையுமுண்டு
வதிலிருப்பா ராயிரம்பே ரதிகச்சித்தர்
காணப்பா அவர்களைத்தான் கண்டாயானல்
கனகமது கேட்டதெல்லாங் கையிலீவார்
நாணப்பா கெவுனமென்ற குளிகையீவார்
நலமான கற்பமது நல்குவாரே. (116)

தாடகைசுனைமகத்துவம்.

நல்குவா ரம்மலையி லுதகமுண்டு
நலமான தயிலமுண்டு பாஷாணமுண்டு
செல்குவார் மூலிகைதான் கோடியுண்டு
திரவியங்கள் கிடாரத்தி லிருப்ப துண்டு
புல்குவார் தாடகையிற் கிழக்குராவில்
புதுமையொன்று சொல்லுகிறேன் பிழைக்கும்பேர்க்கு
ஒல்குவா ரடையாள முரைக்கக்கேளு
ஓராறுயரம் வொருகையில் துறட்டிதானே. (117)

தயிலமிருப்பிடம்-தயிலமெடுக்கும்விவரம்.

கையிலொரு துறட்டிதனைக் கண்டாயானல்
காணப்பா வதனருகே கல்லிற்பூண்டு
செயலோடு சித்திரையு மங்காளிற்றன்
சென்றக்கால் தயிலமது சிவந்துபாயும்
நயமாக வதினெடுக்கக் குழிதானென்று
நலமாக வதிற்றயிலஞ் சென்றுபாயும்
மயமாருந் தயிலஞ்சித்தர் கொடுபோமுன்னே
மைந்தனே யாத்திருந் தெடுத்துக்கொள்ளே. (118)

தயிலம்வைக்கப்பாத்திரம்-சயிலவுதக தயிலமகத்துவம்.

கொள்ளுவது பேச்சுரையின் குடுக்கைதன்னில்
கொள்ளமட்டு மடைத்ததனைக் கொண்டுபோய்நீ
விள்ளுகிறேன் காசிடைதா னுள்ளேகொள்ளு
மேன்மையா மண்டலத்தில் சாவுபோச்சு
தள்ளுவது சட்டையது எல்லாந்தள்ளுஞ்
சயிலவு தகமென்ற தயிலமப்பா
எள்ளளவு இரும்பிலே தடவிப்போட
ஏமமென்ற வித்தையது கைக்குள்ளாச்சே. (119)

மயேந்திரமலைவளப்பம்–கருநெல்லியிடம்.
வாலரசமிருக்குமிடம்.

உள்ளான மயேந்திரமா மலைக்குத்தாழ
ஒருபுறமாம் வடபக்கந் தன்னிலேதான்
கல்லான கல்லிலே குகைதானுண்டு
கருநெல்லி யதனிலொரு மரந்தானுண்டு
தள்ளாத குகைதனிற்கற் பாஷாணமாகு
தயிலமுண்டு வுதகமுண்டு தனந்தானுண்டு
விள்ளாத வாலரச மொன்றதாகும்
மேலான பரிசனமாம் வேதையாமே. (120)

நம்பிமலைவளம்-சோதிவிருட்சம் செங்கற்றாழை.

ஆமென்ற நம்பிமலை வடபுரத்தில்
அதிகமாஞ் சோதியது ஆல்போல்நிற்கும்
வாமென்ற வதினருகே செங்கற்றாழை
வரிசையாய் நிற்குமடா யிரத்தவர்ணம்
போமென்ற காயசித்திக் கேத்தகற்பம்
புதுமையின்னஞ் சொல்லுகிறேன் பூண்டுகேளு
தாமென்ற பொதிகைக்குக் கிழக்குச்சார்பில்
தாண்டியொரு நாழிகைதான் மலையிற்சென்றால். (121)

சிவந்தவிலைக்கள்ளி செந்திராய்-சுணங்கன்மூலி.

சென்றிடவே யவ்விடத்தில் சுனைதானொன்று
சிவந்ததொரு இலைக்கள்ளி செந்திராயுங்
கன்றிடவே யுண்டாகுஞ் சுணங்கன்மூலி
காயசித்திக் கேத்தகற்பம் கணக்கவுண்டு
பண்டுடைய கற்பத்தைக் கண்டபேர்க்குப்
பரிவான காயசித்தி கெவுனசித்தி
யென்றுமே வாதசித்தி யெய்துமெய்தும்
இறைவன்போ லெந்நாளு மிருந்துபாரே. (122)

நரைதிரைமாறத்தயிலம்.

இருத்துகின்ற தயிலமொன்று இயம்பக்கேளாய்
இயலான கடுக்காய்வேர்த் தயிலம்நாழி
வருத்துகின்ற நெல்லிக்காய்த் தயிலம்நாழி
வளமான தாணிக்காய்த் தயிலம்நாழி
திருத்துகின்ற கருந்துவரைத் தயிலம்நாழி
சேங்கொட்டை வித்தினுட தயிலம்நாழி
பொருத்துகின்ற யழிஞ்சிவிதைத் தயிலம்நாழி
புகழான வேம்பின்றோல் தயிலம்நாழி. (123)

5

நாழியென்ற சிவன்வேம்புத் தயிலம்நாழி
நலமான காரெள்ளுத் தயிலம்நாழி
வாழியென்ற வாலுளுவைத் தயிலம்நாழி
வளமான வகையெல்லாந் தயிலம்வாங்கி
தாழியென்ற பீங்கானும் பாண்டத்துள்ளே
சாதகமாய் விட்டுமொரு சேதிகேளு
காழியென்ற தயிலமதி லோகங்காந்தங்
கருதியதோர் செந்தூரங் கலந்துகொள்ளே. (124)

மலையேறப்பக்குவம்-தயிலத்துக்குப்பத்தியம்.

கலந்ததனை நெல்லுக்குள் மண்டலந்தான்வைத்துக்
கணபதியைப் பூசித்துக் காசிடைதான்கொள்ளு
மலந்ததொரு மண்டலந்தான் கொண்டாயானால்
வளர்கின்ற நரைமாறி வண்டுபோலாம்
நலந்திகழுந் தேகமது சிவந்துகாணும்
நாட்டுக்கு ளதிகமிது நாட்டிப்பாரு
பலந்தருங் காணித்தயிலஞ் செய்துகொண்டு
பாரிக்கு மலைமேலே யேறுயேறே. (125)

ஏறுவது யெப்படித்தா னென்றாயானால்
இடும்பென்ற ஆணுவமு முனிவுந்தீர்ந்து
கூறுகின்ற கொலைகளவுங் காமம்பொய்யுங்
கொடுமையென்ற பாவங்கள் தன்னைத்தீர்த்து
மாறுகின்ற மனந்துறந்து நிராசையாகி
வளமாகப் பச்சரிசி பொங்கியேதான்
தேறலது பால்கூட்டிச் சிறுபயறுங்கூட்டிச்
செயமாக வோர்வேளை யமுதுகொள்ளே. (126)

வாசிதுழி.

கொள்ளையிலே யிடைக்கலையில் வாசிபாரு
கூசாமல் நெட்டோடே யேறயேறு
தன்னையென்ற ஆத்தானை நித்தம்பூசி
சாயுச்சிய பதத்தைசித்தம் சார்ந்துநில்லு
வள்ளையிலே யிதுவெல்லா மகிழ்ந்துபாரு
மகத்தான பூரணமு மனதிற்றோன்றும்
பிள்ளையிலே யுங்களைப்போல் பிள்ளையுண்டோ
பேய்மக்கா ளலையாதே நிலைத்துக்கோவே. (127)

பசுபதிபாசம்-புரியட்டம்.

கோவென்ற பசுவொன்று பதிதானொன்று
கூறுகெட்ட பாசமொன்று மூன்றுங்கூட்டித்
தேவனென்ற பிறப்புக்கு இடமுண்டாச்சு
சித்தனென்ற விதைத்தள்ளி சிவயோகஞ்சேர்
ஆவென்ற வகையில்லை யென்றுசொல்லி
யலைபாதே யிந்நூலி லடுத்தசித்தி
பூவென்ற ஆயிரத்தெண் மலர்ப்பூவைத்தான்
போத்தியே நீமுட்டப் புரியட்டம்போமே. (128)

பசியாதிருக்க.

போமென்ற புரியட்ட மெட்டினாலே
போகாம லடங்கினாற் பிறவிபோச்சு
சாவென்ற சொல்லேது லயிதானேது
சாயுச்சிய மானதொரு ஞானவானே
யாமென்ற வமுர்தமது வுண்டாயானால்
அப்பனே பசிபோச்சு சித்தியாச்சு
நாமென்ற வாணுவமு மப்போபோச்சு
நலமான சிவசித்தன் ஞானியாமே. (129)

தேகவாசனை.

ஞானியென்று வொருகலையில் காய்த்ததோசொல்
நரசென்மங் கோடியிலே யொருவனப்பா
யோனிவாய்ப் பட்டசட மாகையாலே
யுத்தமனே காயசித்தி யாகவேணும்
ஊனென்ற தேகமது கற்பதேகம்
உத்தமனே கயிலாய தேகமானால்
மானிலத்தின் மனிதனல்ல தேவனாச்சு
மைந்தனே யற்பமடா மனிதர்வாழ்வே. (130)

பூநீற்றுக்கரு.

வாழவே யின்னமொரு வரிசைகேளாய்
வளமான பூநீற்றை வாரிக்கொண்டு
தாளவே சாறுவராத் தழைகளெல்லாஞ்
சாதகமாய்ப் போட்டிடவே தண்ணீராகுஞ்
சூழவே காரத்தை சிறுநீருப்பில்
தோய்த்திடவே காரமது சுண்ணமாகும்
கூழவே சாறுகளில் போட்டுச்சற்றே
குருவென்ற கற்சுண்ணத் துப்புச்சத்தே. (131)

பாஷாணக்கட்டு.

சத்தான சாறுவகை சொல்லக்கேளு
சம்பிரச் சாறுதான் படிதானொன்று
வித்தான முன்சொன்னகுரு வகைதானொன்று
விளங்கவே வலையொன்று வராகனொன்று
முத்தாகப் போட்டதனைக் கலக்கிவைத்தால்
முறிந்துமே யொருநாளில் தண்ணீராகும்
பத்தான தெளிவதனை யிறுத்துக்கொண்டு
பாஷாணங் கழஞ்சுக்குச் சுருக்குப்போடே. (132)

அயமணி.

போட்டிடவே பாஷாணங் கட்டிப்போகும்
புகழான செம்பிலிட வெள்ளியாகும்
ஆட்டிடவே யரைப்பொடியில் விட்டரைத்து
அளவாக வுணர்ந்திடவே மணியுமாகும்
நீட்டியதோர் தங்கமதிற் சேர்த்துருக்கி
நிசமாக வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்
நாட்டிடவே யாரேழு வரைக்குங்காணும்
நலமான இரும்பிலிட வேதைதானே. (133)

தாம்பிரவேதை.

இரும்பைவிட்டுச் செம்பதனைச் சொல்லக்கேளு
எழுத்தாணிப் பச்சிலையின் சாறுநாழி
முருங்கையுட பட்டைச்சாறு நாழிகூட்டி
முந்தினதோர் குருவகைக்கு வராகன்போடு
அரும்பவே யறுபதுநா ழிகைகடந்தால்
அதனுடைய தெளிவதனை யிறுத்துக்கொண்டு
துரும்பான செம்பதனை யுருக்கிச்சாய்த்தால்
சுகமாக வீரஞ்சு துய்யாளுமே. (134)

பாஷாணக்கட்டு.

துய்யானி விடைக்கிடைதான் சேர்த்தாயானால்
துய்யாளுஞ் சொல்லரிது சொல்லிவிட்டேன்
மெய்யாகச் சொல்லுகிறேன் சதிரக்கள்ளி
விதமான பாலதனைக் கறந்துவந்து
அய்யாகேள் முன்குருவில் வராகன்போட்டு
அறுபதுநா ழிகையிருக்கத் தெளிந்துபோகும்
உய்யவே யொருகழஞ்சு வெள்ளையப்பா
வுழக்குநீர்ச் சுருக்கிட்டாற் கட்டிப்போமே. (135)

நாகக்கட்டு.

போகின்ற பாஷாணந் தன்னைவாங்கிப்
புக்கிடவே கழஞ்சுக்கு மஞ்சாடிதான்
ஆகின்ற நாகமது கட்டிப்போகும்
அந்த்இடை தங்கத்தை யதனிற்றாக்கி
ஏகின்ற வெள்ளிசெம்பி லீய்ந்தாயானால்
ஏழுரையா மிதன்பெருமை யியம்பப்போமோ
வாகுடைய வழுரியது படிதானென்று
மைந்தனே முனகுருவும் வாகனென்றே. (136)

சூதக்கட்டு.

ஒன்றாகப் போட்டதனை வைத்தாயானால்
உத்தமனே கல்மசந்தா னுரைநதுகானும்
பன்றாகத் தெளிவிறுதது ரசத்திற்கூத்த
பாலையாம் ரசமதுதா னட்டைபோலாம்
நன்றாக வதையெடுத்துக் கருவூமத்தை
நலமான காயதனிற் புடத்தைப்போடு
வென்றாக வோர்புடந்தான் கோழியாகும்
விதமாகக் கட்டிப்போம் வெள்ளியாமே. (137)

சூதச்செந்தூரம்.

வெள்ளியென்ற சூதத்தைத் தின்றாயானால்
வெள்ளியென்ற நரைகளெல்லாம் வண்டுபோலாம்
தெள்ளியதோர் தங்கமிட்டு கெந்தியிட்டு
செந்தூரஞ் செய்திடவே சொர்னமாகும்
அள்ளியதோ ரசவெள்ளி கெவுனமாகும்
அப்பனே சாரணையைத் தீர்ந்தபோது
உள்ளியென்ற காட்டுள்ளி யிடித்துக்கொண்டு
உத்தமனே முன்குருவைப் போட்டிடாயே. (138)

வெள்ளீயம்நீர்வாங்கல்.

போட்டதனைப் பிழிந்திடவே தண்ணீராகும்
புகழான முன்குருவைப் பின்னுமிட்டு
ஆட்டிதனை வைத்துவைக்கத் தெளிவதாகும்
அத்தெளிவில் வெள்ளீய முருக்கிச்சாய்க்கப்
பூட்டிதனைப் பத்துமுறை சாய்த்தாயானால்
புகழாகக் கட்டிப்போம் பூண்டுபோரு
நாட்டதனில் ரசங்கட்டுஞ் சுருக்குப்போட
நலமான குளிகையது கெவுனமாமே (139)

லிங்கக்கட்டு.

ஆமப்பா முன்குருவை யிலைக்கள்ளிபாலில்
அப்பனே யிட்டுவைக்கத் தெளிந்துபோகும்
வேமப்பா வன்னீரில் சாதிலிங்கம்
விதமாகச் சுருக்கிடவே கட்டிப்போகும்
நாமப்பா வெள்ளியிலே வேதையாகும்
நலமான தங்கத்திற் சேர்ந்தாடும்
ஓமப்பா யிக்குருவை யண்டத்துள்ளே
யுருக்கவே வகைக்குக்கால் வராகன்போடே. (140)

போட்டிதனை வெயிலில்வைக்க மெழுகுமாகும்
புகழான பாஷாண மெல்லாஞ்சாகும்
ஈட்டமுள்ள லோகமெட்டில் வேதையாகும்
இதுபோலச் சுருக்குள்ள போக்கொன்றில்லை
நாட்டமுடன் இக்குருவை வைக்கவேண்டாம்
நலமான பச்சையடா பூநீர்ச்சுண்ணம்
தேட்டமுட னித்தொழிலை முன்னேசெய்து
செயமான லோகத்தி லிருந்துதேறே. (141)

விளையகற்றல்.

தேறுதற்கு யின்னமொரு கருவைக்கேளு
செப்பாதே கருவையெல்லாஞ் செப்பினேன்கேள்
யேறுதற்கு மலையொன்று மில்லையப்பா
யிருந்தாநீ பிறவாதே யிறவாதேநீ
கூறுவது சத்தியமே பொய்யாகாது
கொலையொன்று மாகாது கொடுமையாகா
வேறுதுறை யேதுமில்லை வழலையாதி
வேதாந்தக் கருவுக்கு மனமதாமே. (142)

தீட்சையிரண்டுக்குங்காலம்-சூரியன்தோற்றம்.

ஆமப்பா மனமுருகச் சித்தியாச்சு
அறிவுகொண்டு சிவயோகத் தடுத்துநோக்கித்
தாமப்பா சிவதீட்சை சத்திதீட்சை
சாதகமாய் காலைசிவ மாலைசத்தி
போமப்பா யிரண்டுக்கு மிடைகலைவான் சித்தி
போக்கோடே மவுனமுதந்தி பூண்டுநோக்க
வேமப்பா மூலத்தின் மேலேசாடும்
வெளிக்காடி சூரியன்போ லுள்ளேகாணும். (143)

சிவத்தின்கூறு-சத்திகூறு.

காணுதற்கு மவுனமுற்றுப் பாருபாரு
காசினியில் விசாரமெல்லாந் தள்ளுதள்ளு
வீணப்பா விசாரமென்ன சமுசாரமென்ன
வெட்டவெளி யொன்றுமில்லை சிவத்தின்கூறு
தோணுகின்ற ரூபமெல்லாஞ் சத்தியாகுஞ்
சுருதிமுடி வீதிரண்டு மல்லாதுண்டோ
ஊணுகின்ற பஞ்சகர்த்தா வெல்லமாச்சு
வுறுதியிந்தக் கருவின்றி வேறேதாதே. (144)

சடவாழ்க்கை.

ஓதுவது வேதமே யோதவேணும்
உலகத்தில் வேதமில்லா தொன்றுமில்லை
மாதுமக்க ளென்றுதா மெண்ணியெண்ணி
மாள்வதற்கும் பிறப்பதற்கும் வைத்தானீசன்
தீதுவென்ற தீயினிலே விழுந்தாயானால்
செடம்விழுந்து போகுமடா ஞானமேது
தாதுவென்ற சடமிருந்தால் ஞானம்வாய்க்குஞ்
சகலகலைத் தியானமெல்லாந் தருகும்பாரே. (145)

நூலின்மகத்துவமுரைத்தது.

பார்ப்பதற்கு இந்நூலே பார்க்கவேணும்
பரிபூரண சூத்திரமாய்ப் பாடினேன்யான்
தீர்ப்பதற்கு வினைகளெல்லாந் தீட்சைசொன்னேன்
செயமான கற்பமது தெளியச்சொன்னேன்
கூர்ப்புடனே வாதத்தின் விபரஞ்சொன்னேன்
குறைகளெல்லாந் தீர்த்துவிட்டேன் கூர்ந்துபாரு
சூர்ப்பநகி யாசைகொண்டே யெல்லாம்போச்சு
சுருதியுள்ள கெடியனென்று லெல்லாமாச்சே. (146)

லோகத்தோடொத்துவாழ்தல்.

ஆச்சிந்த லோகத்தி லிருக்கும்போது
அசலருடன் கூடாதே யாணவம்பேசாதே
நாச்சிந்த வுலகத்தில் நடக்கலாகா
நடந்தாலு மவுனத்தே தூங்குதூங்கு
காச்சந்த மவுனத்தை விட்டாயானால்
கருவிகடான் கொல்லுமடா தியானம்போச்சு
மூச்சென்ற யோகமுதல் ஞானம்போச்சு
முறையோடே யிருக்கவென்றால் குறைகையக்காரே. ()

சித்தரென்போர்நெறி.

கார்ப்பதுதான் பூரணத்தைக் காக்கவேணும்
காரென்று புருவமையத் திருக்கவேணும்
தீர்ப்பதுதான் வாசனையைத் தீர்க்கவேணும்
செகமெல்லா மொன்றுமில்லை யெண்ணவேணும்
ஆர்ப்பனத்துக் கழிவில்லா திருக்கவேணும்
அப்பலல்லோ சித்தனென்ற ஆண்மையாச்சு
நாற்பதுக்குள் கற்பமுண்ணக் கோடியாச்சு
நரைத்தாக்கால் நாளதிகஞ் செல்லும்நன்றே. (148)

வருடநிலை.

நன்றாக நாளதிகஞ் சென்றதென்ன
காட்டிப்பார் வருடமொன்றில் சித்தியொன்று
பன்றான ஆண்டதுதான் பத்துக்குள்ளே
பரிவான காயசித்தி யோகசித்தி
யுன்றான கெவுனசித்தி ஞானசித்தி
யுரப்பான சட்டைதள்ளிக் காந்தியாகும்
ஒன்றான தேகமது வுருபமாகும்
உத்தமனே கத்திகடு வோடும்பாரே. (149)

சட்டைகழலுமார்க்கம்:

ஓடுகின்ற தத்துவந்தான் தொண்ணூற்றாறு
மோர்கருவிக் கோர்சட்டை யுரிந்துதானால்
சாடுகின்ற பிறவியெல்லாந் தள்ளிப்போச்சு
சாயுச்ய பதவியிலே சார்ந்துபோச்சு
பாடுகின்ற வேதாந்தம் வெளியாய்ப்போச்சு
பரிபூரணந் தானாச்சு பகலுமாச்சு
வேடுவென்று னெடுத்தபுழுத் தன்ரூபங்கொண்டு
வித்மாச்சு மாயையெல்லாம் வெளியுமாச்சே. (150)

ஆச்சப்பா வாதத்தின் கருவைக்கேளு
அப்பனே வாயிரத்தி னூறுக்குள்ளே
பேச்சப்பா சகலகலை செய்தியெல்லாம்
பேசாத கருவையெல்லாம் பேசிவைத்தேன்
போச்சப்பா பேசிவைத்த கருவேதென்றால்
புகழான சவுக்காரப் போக்குத்தாக்கும்
யேச்சப்பா முப்பூவின் தீட்சைமார்க்கம்
இயலான கடுங்காரச் செயநீர்போக்கே. (151)

நூல்தொகைவிரிவுரைத்தல்.

போக்கான சுண்ணத்தின் கருவுஞ்சொன்னேன்
புகழான செயநீரின் கல்லுஞ்சொல்லி
வாக்கான களங்கோடு செந்தூரங்கள்
வகையான திராவகமுஞ் சரக்கின்வைப்பும்
தாக்கான கருவோடு குருவுஞ்சொல்லி
சாதகமாங் கைபாகஞ் செய்பாகங்கள்
தூக்கான இடைபாகம் பாகைபாகஞ்
சுறுக்காகுந் தேகமொடு தேகமெண்ணே. (152)

எண்ணவே ஞானமொடு மூலிகையின்கூறும்
இயல்பான கைபாக மெல்லாஞ்சொன்னேன்
வண்ணமா மெங்கெந்த நூல்களெல்லாம்
வாகான நிகண்டுமது மருவிப்பாரு
பொன்னான பொன்னதுபோ லிந்நூலுந்தான்
போக்கொன்றுந் தப்பாது மறைக்கவில்லை
நன்னயமாஞ் சாத்திரத்தில் மறைப்பேனென்று
நாட்டினேன் வெளியாக நாட்டினேனே. (153)

கயவர்நிலைமை.

நாட்டிலே யிப்படித்தான் வெட்டவெளியாக
நாட்டியுந்தா னறியாட்டா லென்னசெய்வோம்
பாட்டிலே சொன்னதென்றும் பலியாதென்றும்
பாவிகள்தா னெடுத்துரைப்பார் பழமையல்லால்
வீட்டிலே யிருந்துகொண்டு வீண்வாய்பேசும்
வெள்ளாட்டுப் பயல்களுக்கு மெய்யோசாத்திரம்
தேட்டிலே சாத்திரத்தைத் தேடவேணுந்
திறவியிலே மனமிருக்கச் சித்தியாமே. (154)

பூசையில்தாயைநினைத்தல்.

சித்திக்க வேணுமென்றாற் சொல்லக்கேளு
செகச்சால மாடுகிற தாயைக்கேளு
புத்திக்கும் அவள்பதத்தைப் பூசையன்று
போக்கொன்றுந் தப்பாது பொய்போகாது
முத்திக்கும் பூசைமுறை தன்னைக்கேளு
மூண்டதொரு சமாதிக்கு ளகிரிவேணும்
பத்திக்கு மூதண்ட லேகியந்தான்
பாங்கான ஸ்கிரியப்பா சட்டமாமே. (155)

தாய்வாமீய்தல்.

சட்டமாங் கற்பத்துக் குறுதியாகுந்
தாயோடு தந்தைக்குப் பிரிதியாகும்
இட்டமாம் வாமத்தைக் கொண்டாயானால்
எடுத்ததொரு துறையெல்லா மிடறிப்போகும்
தொட்டதொரு பூசையிலே வாமம்வைத்துச்
சுகமாகப் பூசிக்கச் செலமதானால்
அட்டமா சித்தியது வாச்சுதப்பா
ஆத்தாளா மப்பனுக்கு மாச்சுதெண்ணே. (156)

விவேகதாட்சி.

ஆச்சுதே யோகத்துக் கேணியாச்சு
அப்பனே கற்பத்துக் காசாதாகும்
வாச்சுதே யென்றுசொல்லி வாமங்கொண்டு
மதிமயங்கி வாய்புலம்பி மயங்கிப்போனால்
ஏச்சுதே சாபமது தீரவில்லை
எமமென்ற வித்தையது யெய்தவில்லை
காச்சுதே யறிவென்ற ஞானம்போச்சு
கசுமால வாதியென்ற கழுதைதானே. (157)

பச்சைப்பூரவைப்பு.

தானென்ற கற்பூரஞ் சொல்லக்கேளு
சாதகமாய்ப் பரங்கிவைப்புக் கிடையாதப்பா
ஏனென்ற சூடனது பலந்தானென்று
இயல்பான வெடியுப்புப் பலமுக்கால்தான்
சேனென்ற வுவர்ப்பூவும் பலமொன்று
சேரதிலே கழஞ்சியொன்று புருகுகூட்டி
வானென்ற ஆவின்னெய் விட்டரைத்து
வைத்துநீ குப்பியிலே சீலைசெய்து. (158)

செய்துமே வாலுகையில் தீயைமூட்டு
சுகமாக முத்தீயு மூன்றுசாமம்
எய்துமே தியாற்றி யெடுத்தாயானால்
இளந்தேங்காய்க் காய்போல்தா னிருக்கும்பூரம்
கொய்ததொரு குங்குமப்பூ வாசம்போலக்
குணமாகும் பச்சையென்ற பூரந்தானும்
எய்துமே யளப்பாகும் வாதத்துக்கு
மிதுவாதி குருவாகு மிசைந்துபாரே. (159)

சவ்வீரவைப்பு.

பாரப்பா யின்னமொரு சேதிகேளு
பரிவான வீரத்தின் வைப்பைக்கேளு
நேரப்பா சடைதனிலே யிருக்கும்வீரம்
நேராகப் பலமொன்று யெடுத்துக்கொண்டு
சேரப்பா வதினோடு துரிசிச்சீனஞ்
செய்தவொரு நவச்சார மன்னபேதி
ஊரப்பா கரியுப்பு யுவருப்போடு
உறவான வெடியுப்புப் பலமுங்காலே. (160)

காலாக இதுவெல்லாம் பொடித்துக்கொண்டு
கருணைபெற வேணுமென்று குப்பிக்கேற்றி
நாலாக முத்தியு மாறுசாமம்
நலமாக வெரித்ததனை வாங்கிக்கொண்டு
பாங்கான தேங்காய்போ லிறுகிநிற்கும்
பண்பாக வுடைத்ததனை வைத்துக்கொண்டு
சேலாக முன்போலே நிறுத்துக்கொண்டு
சேர்த்துநீ பொடித்தெடுத்துக் குப்பிக்கேற்றே. (161)

வீரத்தின்மகத்துவம்.

ஏற்றியே முன்போலே எரித்துவாங்கு
இப்படியே மும்முறையி லிருக்கும்வீரம்
தேற்றியே யிவ்வீரஞ் சகலத்துக்குந்
திறமான குருவாகும் வீரராசன்
நீற்றினமு முருக்கினங்கட் டினமுங்கோடி
நேரான செந்தூரக் களங்குங்கோடி
வீற்றியே செயநீருந் திராவகமுங்குருவும்
மேலான சாரணையும் வீரமாமே. (162)

சித்தருக்குண்டானநாலுவித்தைவிபரம்.

வீரமாஞ் சித்தருக்குச் சொல்லக்கேளாய்
வித்தையிலே நாலுவித்தை மேலாம்வித்தை
வாரமாம் வாதமொடு வசியமாற்றம்
வளமான அஞ்சனமும் வரவும்வேணும்
ஆரமா யிந்நாலு மில்லாவிட்டால்
அலைவாகுஞ் சித்தருக்கு ளடுக்கமாட்டார்
பாரமாம் வாதமொடு வசியஞ்சொன்னோம்
பார்ப்போர்க்கு அஞ்சனமு மாற்றம்பாரே. (163)

மாத்துமை.

மாற்றமென்ற வித்தைக்கு வகையைக்கேளாய்
வால்நீண்ட கருங்குருவி யில்லாவிட்டால
தோற்றுகின்ற காமரூபி பிணைச்சல்பார்த்துச்
சுருதியாய்ப் பிடித்துவந்து சொல்லக்கேளாய்
ஏற்றுகின்ற வெவ்வேறே சட்டிற்போட்டு
யெரித்துநீ வறுத்திடுவாய் கருகமட்டும்
போற்றுகின்ற யழிஞ்சிபின்வேர் கொண்டுகிண்டி
பொடியாக்கிக் கரிப்போலே வறுத்துக்கொள்ளே. (164)

அழிஞ்சில்தயிலம்.

வறுத்தகரி தனையரைப்பாய் தயிலங்கொண்டு
வாசனை தயிலத்தின வளமைகேளாய்
பொருத்தமொரு யழிஞ்சில்விதைத் தயிலஞ்செய்து
புதுமையுள்ள தயிலமது விட்டுமத்தி
செறுத்தவிதைப் பொடிசெய்துக் கலசத்திட்டு
தீயான சூரியன்றன் முகத்தில்வைக்கக்
கறுத்தொரு தயிலமது விறங்கும்போது
கரியுடனே சேர்த்தரைத்துச் சிமிழில்வையே. (165)

வசியம்—கருங்குருவிமை—குழியானைமை.

வைத்ததனைத் திலதமிட வசியமாகும்
மாற்றமாந் தேகமது யார்க்குங்காணு
உற்றதொரு கருங்குருவி யிதுபோற்பண்ணை
உறுதியாந் திலதமது வுண்மையாகும்
சித்தியுள்ள குழியானைச் சிறங்கையொன்று
செய்திடவே முன்போலே சித்தியாகும்
புத்தியுள்ள பேர்களுக்குப் பிழைக்கச்சொன்னேன்
புதுமையுள்ள அஞ்சனத்தைப் புகலக்கேளாய். (166)

அஞ்சனமை.

கேளப்பா அஞ்சனத்துக் கஞ்சனப்பாஷாணங்
கிடையாது பறங்கிவைப்பு கொடுக்கமாட்டான்
நாளப்பா நாட்டிலுள்ள கருவைக்கொண்டு
நாட்டுகிறே னஞ்சனத்தை நன்றாய்க்கேளு
வேளப்பா கருங்குருவி சிவந்ததொன்று
விதமான பச்சோந்தி புடம்புகாக்கை
சூளப்பா பச்சைப்பாம் பரணைநாகஞ்
சோதியொத்த யிந்திரமால கோபப்பூச்சி. (167)

மணத்தவளைத்தயிலம்

பூச்சியென்ற வகையெல்லா முழுதுமாகும்
புகலுகின்ற மதமெல்லா நலைகளாகும்
ஆச்சியென்ற திதுவெல்லா முணர்த்தித்தூளா
யாக்கியே பறணியிலே யடைத்துக்கொண்டு
வாச்சுதென்ற மணத்தவளைத் தயிலஞ்சொல்வேன்
மைந்தனே நூறுதா னெடுத்துவந்து
காச்சிதென்ற வெய்யலிலே யுலர்த்திக்கொண்டு
கட்டினு மணக்குமுத்துக் காரெள்ளோடு. (168)

திரிசெய்விதம்

எள்ளோடு அழிஞ்சிலவிரை யிடித்துக்கொண்டு
இதமாகக் குழித்தயில மிறக்கியேதான்
விள்ளாதே பறணியிலே யடைத்துக்கொண்டு
மேன்மையாம் பெண்ணுடைய விலக்கச்சீலை
தள்ளாதே சாணிகளுஞ் சதுரமாகத்
தானெடுத்து வதில்முன்றாள் பரப்பியேதான்
கொள்ளமட்டுந் திரிபோலே யுருட்டிக்கொண்டு
குணமான வெள்ளெருக்கின் நாலைச்சுற்றே. (169)

மைவாங்கும்வகை—மைபார்க்கும்பருவம்.

சற்றியதோர் திரியதனை விளக்கிலிட்டுச்
சுகமான முன்றயில மதனில்வார்த்துப்
பத்தியாங் காராமை யோட்டுக்குள்ளே
பத்துகின்ற மையதனைப் பறண்டிக்கொண்டு
வெற்றியா முன்றயிலம புத்துத்தேனும்
விதமாகச் சரியிடையாய்க் கூட்டிமத்தி
சித்தியாம் பதினாறு வயதுசென்ற
செல்வர்கையி லிட்டிடவே தெரியுந்தூரம். (170)

அஞ்சனத்தின்குணம்.

தூரமது நாழிகைக்குள் பாதாளத்திற்
சூட்டிவைத்த தனங்களெல்லாந் தோணலாகும்
காரமது யார்கையி லிட்டாலுந்தான்
கைகடந்து காணுமடா அதீதமைதான்
வாரமது வானபேய்க் கணங்களெல்லாம்
மாறிவிட்ட மந்திரங்க ளொன்றும்வேண்டாம்
சூறையாம் பேய்களுக்குக் கருவதொன்று
சொல்லுகிறேன் கழுதைநெய்யின சூறுக்குத்தானே. ()

பூதவிலக்கத்தயிலம்.

சுறுக்காக விருக்கவென்றால் சொல்லக்கேளாய்
    கருதியாங் கழுதையுட கொழுப்பைவாங்கி
இருக்காக உருக்கிநெய்யை யெடுத்துக்கொண்டு
    யிதமான தலங்களிலே தீபமேற்று
உறுக்கான பேய்பூத மோடிப்போகும்
    உண்மையிது சொல்லிவிட்டே னுலகுள்ளோர்க்குச்
சுறுக்கான வாதவித்தை வருமுன்னாகத்
    தாரணியிற் செய்துகொண்டு தபசுபண்ணே. (172)

தனங்களிருக்குந்தலம்—அழகர்மலை

பண்ணயிலே தனங்கிடக்குந் தலங்கள்சொல்வேன்
    பாரிலே யலையாதே பாங்குகேளாய்
உண்ணியதோர் மதுரைக்கு வடகீழாக
    வுரைக்கிறே னழகர்மலை யுபரத்தானும்
நண்ணயிலே சுனையருகில் விருக்ஷமொன்று
    நலமாக வதின்கீழே சுனைதானொன்று
உண்ணயிலே யருவியுட னூறலப்பா
    வுலகத்தோ ராடுவார் தீர்த்தமென்றே. (173)

சித்தர்வைப்பு.

தீர்த்தமென்ற வச்சுனையில் கிடாரமொன்று
    செயமான ஆழக்கால் தன்னிற்றூங்கும்
சீத்தமென்ற வோராணுக் குள்ளேயப்பா
    சேரான சித்தர்வைப்பு நெடுங்காலமாச்சு
காத்தமென்ற காயசித்தி செய்யவேண்டில்
    காசினியி லதையெடுத்துச் செலவுசெய்து
வாத்தமென்ற கற்பமுண்டு வாழ்வோர்க்காகும்
    வையகத்தோ ராசைவைத்தல் வாயாதென்னே. (174)

(மயிலாடுமலையில்கார்த்திகைவீரவர்ச்சுனன்வைப்பு.)

வாய்க்கவின்னஞ் சொல்லுகிறேன் மதுரைக்குமேற்கே
    மலையொன்று மயிலாடும் போத்தையென்பார்
பாக்கியமா மம்மலையிற் கிணறொன் றுண்டு
    பாரப்பா வதிலிறங்கிப் பாருந்தான்
காக்கியதோ ரிரண்டாளின் தாழப்போனால்
    தங்கமென்ற பாளமது நிறையவுண்டு
தூக்கியதோர் பாளத்தை எடுத்துக்கொண்டு
    கார்த்திகைவீர வர்ச்சுனன்றான் வைத்தவைப்பே. (175)

மைநாகமலையில்சித்தர்வைப்புச்செந்தூரம்.

குகைகதவுதிறக்க.

வெப்பான பவனாச மலைக்குமேற்கே
மைநாக மலையொன்று அதற்குப்பேரு
செப்பான குகையொன்று வதிலேயுண்டு
செந்தூரக் காட்டப்பா சித்தர்வைப்பு
மெய்ப்பான குகைவாசல் திறப்பதற்கு
விதமொன்று சொல்லுகிறேன் விரும்பிக்கேளாய்
ஒப்பாகச் சொன்னஉச்சா டனஞ்செபித்து
உணர்வாக நூற்றெட்டு உருத்தான்சார்பே. (176)

செந்தூரப்பதம் பக்குவம்.

சார்வாகச் செபித்திடத்தாள் திறக்கும்பாரு
தயவாக வதனுள்ளே சென்றாயானால்
ஆர்வாகக் கோடிசெப்பில் செந்தூரங்கள்
அட்டலோ கம்பழுக்கும் வேதைமார்க்கம்
பேராக மண்டலங்கொள் காயசித்தி
பிணியான தணுகாது வயித்தியத்தின்மார்க்கம்
ஆர்வான கெவுனசித்திக் குளிகைசித்தி
அட்டமா சித்திமுத லாடும்பர்ரே. (177)

கதவடைக்க—கருமலை.

பாரப்பா வதிலிருக்குஞ் செந்தூரத்தைப்
பரிந்துனக்கு வேணமட்டு மெடுத்துக்கொண்டு
சேரப்பா கதவதனை யடைக்கவேண்டிச்
செபித்திடுவாய் நூற்றெட்டுத் தம்பனந்தான்
ஆரப்பா கதவதனைத் திறக்கபோறார்
அறையுகிறே னின்னமொரு வதிசயந்தான்
காரப்பா களக்காட்டின் மேற்கதாகக்
கருமலையொன் றம்மலையிற் சுனைதானொன்றே. (178)

கருமலையில் தயிலவைப்பு.

ஒன்றான சுனையருகிற் கிணறொன்றுண்டு
உத்தமனே தயிலமது நிறையநிற்கும்
கன்றான தயிலத்தைக் கலசந்தன்னிற்
காணப்பா முகந்துகொண்டு கருவைக்கேளாய்
நன்றான இரும்புசெம்பு லோகமெட்டில்
நாட்டினால் தங்கமது நலமதாகும்
உண்டான செய்தியிது யின்னங்கேளாய்
உரைக்கின்றேன் வெளியாக வுரைக்கின்றேனே. (179)

நம்பிமலையருகில் விபூஷணர்வைப்பு தங்கக்காசு.

உரைக்கின்றேன் நம்பிமலை நம்பிக்கோவில்
உற்றதொரு சந்திக்குக் கிழக்கதாக
நிரைக்கின்றேன் மலையருகில் குத்துக்கல்லு
நிற்குதடா வதனடியில் தங்கக்காசு
கரைக்காசுங் கற்குழிதா னொன்றுக்குள்ளே
கனகமென்ற காசதுதான் கோடியுண்டு
திரைக்கின்றேன் மூடிக்கல் செய்துமூடி
திறமாக இருக்குமடா திறக்கொணாதே. (180)

கதவுதிறக்கத்தியானம்.

ஒன்றான கல்திறக்கும் வகையைக்கேளாய்
உற்பனமாய் வயிரவரைப் பூசித்தேதான்
நன்றான வயிரவன்றன் தியானமோத
நலமான மூடிக்கல் திறந்துபோகும்
பன்றான கனகத்தை யெடுத்துக்கொண்டு
பரிவான மூடிதன்னை யடைத்துப்போடு
வின்றான விபூஷணர்தான் வைத்தவைப்பு
மேதினியில் கடவாதே மலையிலேதே. (181)

மருந்துமலை.

ஏறுதற்கு இன்னமொரு வகையைக்கேளாய்
இயல்பான குமரிக்கு மேற்கேயப்பா
கூறுவா ருலகத்தோர் மருந்துமலையென்று
குறித்துவைத்த மருந்ததனை யறியமாட்டார்
தேறுவா யம்மருந்தை யறிவதற்குச்
செய்தியொன்று சொல்லக்கேள் மேற்கதாக
ஏறிவா யம்மலையி னுச்சிதன்னில்
யிருக்குதடா சுனையொன்று யிருக்கும்பாரே. (182)

பனைப்பாஷாணவேதை.

இருக்கின்ற சுனைக்குள்ளே பனைப்பாஷாணம்
இயல்பான பனங்குலைபோல் கிடக்கும்பாரு
அருக்கின்ற குலையதனை யெடுத்துக்கொண்டு
அழகான தீயிலிட்டுச் சிவக்கக்காய்ச்சிப்
பருக்கின்ற வெள்ளாட்டின் பாலிற்போட்டால்
பாதியிரு கூறாக வெடித்துப்போகும்
குருக்கொண்ட பாஷாணங் கவுரிபோலக்
கோழிமுட்டை கருப்போன்ற கொள்கைகாணும். ()

(மருந்துமலையில்-தயிலமிருப்பிடம்-அனுமார்வைப்பு.)

காணுகின்ற பாஷாணங் கழற்றிவாங்கிக்
கால்பணமா யேற்றவிடு கற்பமாகும்
தோணுகின்ற பாஷாண வகையிற்றேய்த்துச்
சுகமான காரமிட்டு உருக்கிவாங்கிப்
பூணுகின்ற நவலோகந் தன்னிற்பூட்டப்
பொன்னாகும் பத்தரையும் பொய்யாதப்பா
கோணுகின்ற வதனடிக்கக் குகையொன்றுண்டு
குகையினுட பாகத்தில் வாசலுண்டே. (184)

வாசல்திறக்க நவகோண வாலைபூசை.

வாசலது காணும லடைத்துப்போட்டார்
மகத்தான சித்தருட மாயைமாயை
ஊசலென்ற கதவதுதான் திறப்பதற்கு
உபாயமொன்று சொல்லுகிறே னுண்மையாகக்
காசலையா யம்மலையி லிருந்துகொண்டு
கருதியே நவகோண வாலைபூசை
ஏசலுடன் நாற்பதுநாள் பூசித்தாக்கால்
ஈஸ்வரியாள் கிருபையினால் வாசற்காணும். (185)

கிருபையினால் வாசலது திறந்ததானால்
கேளப்பா வதனுள்ளே நுழைந்துபாரு
உறுதியுள்ள வீடதுபோல் விலாசங்காணும்
ஒருபக்கத்தொருகிணற்றில் தயிலம்நிற்கும்
பொறியென்ற அத்தயில மொண்டுகொண்டு
பூரணமே யென்றுசொல்லிப் பூசித்தேதான்
மறுபடியுங் கதவைத்தா னடைத்துப்போட்டு
வந்திருந்து செய்யுகின்ற மார்க்கங்கேளே. (186)

தயிலம்வந்தமார்க்கம்.

மார்க்கமந்தத் தயிலம்வந்த வகைதான்கேளாய்
மாருதிதான் மருந்துமா மலையிற்சென்று
சேர்க்கையிலே கொண்டுவந்தார் ஸ்ரீராமர்பேரில்
செத்தவர்கள் தனையெழுப்புஞ் செய்கையாலே
போர்க்களத்தில் மடிந்தவர்கள் பிழைத்தபோது
போகாதே வாங்கிவைத்தார் புதுமையாக
ஆர்க்கமுள்ள தயிலமது கொண்டபேர்கள்
அளவிறந்த சித்தராடா ஆதியாமே. (187)

ஆயிந்தத் தயிலத்திற் பணவிடைதான்கொள்ள
 ஆதிசதா சிவன்வரைக்கு மிருத்தும்பாரு
ஓயிந்தத் தயிலமிது யார்க்குக்கிட்டும்
 உறுதியுள்ள சித்தனென்றாற் பிலக்கும்பாரு
வாயிந்தச் சாத்திரந்தான் கிடைத்தபேர்க்கு,
 மறுபிறவி யில்லைமகத் தானசித்தன்
சோயிந்து தரித்தசிவன் சொன்னமார்க்கஞ்
 சொல்லிவிட்டேன் வெட்டவெளி யாகத்தானே. (188)

தோற்றமெய்தல்.

வெளியாகத் தோணுதற்குக் கருவைக்கேளாய்
 வேதாந்த நூல்களெல்லாம் விரைந்துபாரு
ஒழியாத ஆசையெல்லா மொழித்துப்போடு
 ஊடுருவச் சுழிமுனையை யூணிப்பாரு
வழியோடே கற்பமுண்ண வகையைப்பாரு
 வாதவித்தை செய்வதற்கு வகையைப்பாரு
தெளிவாக யேறுதற்குத் தீட்சைபாரு
 ஜெகஜாலக் கூத்தெல்லாஞ் சேரப்போக்கே. (189)

கோங்கணர்பெருமை.

போக்கான சாத்திரங்க ளொன்றுமில்லை
 பூரணத்தின் நூல்போலே சொல்லாதொன்றும்
நோக்கான கொங்கணர்சொல் கடைக்காண்டத்தில்
 நுணுக்கங்க ளதிகமுண்டு கண்டுபாரு
வாக்கான விந்நூலு மந்நூலும்போல்
 வகைவிபர மானதொன்றும் விளங்கவில்லை
தூக்கான நூக்கெல்லாஞ் சொல்லிவிட்டேன்
 சோதித்தால் தெரியுமடா சுருதிசொல்லே. (190)

நூல்மகத்துவம்.

சுருதிகண்டால் சுருதிகொண்டு யேறவேணும்
 துன்மார்க்கர்க் கிந்நூலைச் சூட்டலாகா
பருதிகண்ட பனிபோலே வினைகள்நீங்கும்
 பாரிலுள்ளோர்க் கிந்நூலைப் பகரவேண்டாம்
கருதாம லிந்நூலை யீய்ந்தாயானால்
 கயிலாயச் சித்தர்வந்து சபிக்கச்செய்வார்
ஒருத்தராய்க் கண்டுகொண்டு மனத்துள்வைத்து
 உறத்துடனே வந்துவிடு மலையின்மீதே. (191)

மீதான மலைகளின்மே லேறினாலும்
விருதாகு மிந்நூலைக் கைவிடாதே
வாதாடுஞ் சித்தர்வந்து யெதிர்த்தாரானால்
மறவாம லிந்நூலை யெடுத்துப்பேசு
ஓதாமல் வாய்பிதற்றி யோடுவார்கள்
உனக்குத்தா னெதிராரு வுண்டோவென்று
ஆதார மானதொரு கருவெல்லாந்தான்
அறைந்ததனால் பூரணநூ லானவாறே. (192)

குழிக்கல்லளவு.

வாறான குழிக்கல்லின் மார்க்கங்கேளாய்
மைந்தனே பிர்மாவின் சிரசுபோலே
கூறான வகலமணி விரல்முப்பத்தாங்
கொள்கையாம் நிகளமணி விரல்நால்பத்து
வீறான விளம்பதுதான் விரலிரண்டு
வீதியிலே யாழமிது விரலிரண்டு
பேறான இருபுறமு மூக்குமாகும்
பெரிதான குழவியைத்தான் பேசுவேனே. (193)

குழவிக்கல்லளவு-பிரம்பளவு-செபமாலைக்கணக்கு.

பேசுகிறேன் பதினாறங் குலமாம்நீளம்
பெரிதுமுக வட்டமணி விரல்நால்வீதி
ஆசனே ரிம்மிடியங் குலம்பத்தாகும்
ஆவிடையுஞ் சிவலிங்க மானவாறும்
வீசுகின்ற பிரம்பதுதான் மொழியைந்தாகும்
வேதாந்த நீளமது விரல்பத்தொன்று
ஈசுரன்றன் வகுத்தருளுங் கணக்கிதப்பா
ஏற்றசெப மாலைபதி னாறுமுகமஞ்சே (194)

சித்தர்வேடமறிக-யோகதண்டுப்பிரமாணம் குண்டலப்பிரமாணம்-யோகவேட்டி.

அஞ்சாகும் ஆறாகும் அதீதமாகும்
அணிவிரலால் யோகதண்டா றாறுமாகும்
பஞ்சாட்ச ரக்கவச குண்டலந்தான்கேளு
பரியினுட செம்பதிகம் பளிங்கதிகமாகும்
மஞ்சாடி பதினொன்று பதினாறாகும்
மக்களே யிருபுறமு மகிழ்ந்துகொள்ளு
நெஞ்சுறத்துக் காகுகிற யோகவெட்டி
நெடுநீளந் தொண்ணூற்றா றங்குலமாய்நேரே. (195)

கயிலாயவர்க்கம்-ஆசனம்-லிங்கம்-கோவணம் மணி-கைச்சரவும்.

நேரான வீதிநால் விரலேயாகும்
நிஷ்டைக்கா சனம்புலியா சனமுமாகும்
கூறான ரசலிங்கம் பூசையாகும்
கோவணந்தான் பூங்காவிக் கடகங்கையிற்
சீரான ரசக்குளிகைச் செபமாலைக்குச்
செகமதனிற் கிடையாது செபவிசேடம்
பேரான கைச்சரந்தான் உப்புமணியப்பா
பேசரிய கயிலாய வர்க்கத்தோர்க்கே. (196)

வர்க்கத்தின்பெருமையறிதல்.

வர்க்கத்தி லதிகமடா சிவயோகந்தான்
வண்மையுள்ள மெய்ஞ்ஞான மார்க்கம்ரெண்டு
சொர்க்கத்தில் சொர்க்கம்பேர் பெறவுனக்குத்
தொல்லுலகில் மனிதரோ டுறவுமுண்டோ
கர்த்திக்கக் கர்க்கமென்ற கசடர்தங்கள்
கையிலே யேற்பதுதான் மிகவுங்கொஞ்சம்
மர்க்கத்தி லாகவுன்னை வணங்கவேணும்
வணங்காமற் போனதென்ன வறிந்துகொள்ளே. (197)

சிவயோகம்மெய்ஞ்ஞானிமார்க்கம்.

அறிவான பேரின்பத் தடுத்தானாகில்
அசைவையென்ற தீட்சைபத்து மறிந்தானாகில்
குறியான சிவயோகங் குறித்துக்கண்டார்
கோமளையாம் பராபரைநிற் குணத்தைக்கண்டார்
பிரியாமல் சிவனுடைய வொளியைக்கண்டார்
பேரான சிவயோக ரிஷிமெய்ஞ்ஞானி
நெறியான விதற்கெல்லா மறிவேயாசான்
நினைத்துமக்க ளொருமனதாய் நிலைத்திடீரே. (198)

யோகத்துக்கதிகாரி.

நிலைத்திட ரென்றாலும் நிலைக்கமாட்டான்
நீடுலகிற் கோடியிலே யொருவனப்பா
கலைத்திட ரென்றாலுங் கலைக்கப்போகா
கனத்தநல முள்ளதொரு ராசிசேர்ந்தோர்
மலைத்திட ரென்றாலு மலைப்பானோதான்
வச்சிரம்போ லறிவுடைய மக்காள் மக்காள்
உலைத்திட ரென்றபுத்தி யுலகிலுள்ளோர்
ஓகோகோ வொருகோடி யுளுத்தர்காணே. (199)

கர்மிபோய்வேடர்நிலை.

காணுவேன் வாதமென்பார் யோகமென்பார்
கற்பமுண்ணப் போறனென்பா ருண்டேனென்பார்
பூணுவேன் தீட்சைபத்தும் பெற்றேனென்பார்
பூரணநூல் பாராத புலையரப்பா
தாணுவாய் நின்றபரஞ் சோதிகாணார்
சதாசிவன்றான் வந்தாப்போல பூசைசெய்வார்
ஆணுவத்தா லலைந்துகெட்ட மட்டைப்பேச்சை
யடுத்துநின்று கேளாதே யகலப்போவே. (200)

சித்தர் மரபுளோர்க் குரைத்தல்.

போவென்று சொன்னதுதா னுரைமைந்தா
புகழ்பெரிய சித்தருட மரபுள்ளோரைக்
கூவென்று தர்க்கமிடு மூலமாண்பர்
கூட்டுறவை விட்டுவிடு குன்றிமேலு
தேவென்று சித்தருடன் சேரவேணும்
செப்புவார் வேதாந்தந் திறந்துசொல்வார்
ஆமென்று வலையாதே கற்பங்கொள்ளாய்
அப்பனே யோகமுற்று லதீதப்பேறே. (201)

பேறறிதல்.

பேறென்று சொல்வதுதான் ஞானப்பேறு
பேசரிய வேதாந்தம் பெற்றபேறு
நூறென்று பூரணநூல் பார்த்தபேர்கள்
நுண்மையென்றுஞ் சிவயோகத் திருந்தபேறு
வாறொன்ற காயசித்தி யானபேறு
மகத்தான தீட்சைவிதி யறிந்தபேறு
ஓறென்ற வமுதமதை யுண்டபேறு
ஓகோகோ வெவுனசித்தி யுறுதிப்பேறே. (202)

வயிராக்கியம்பூணல்-ஆக்கைநிலையாமை.

உறுதியா மித்தனைக்குங் குருவேவேதன்றால்
உத்தமமா மனமல்லோ விதற்குமூலம்
பொறுதியாங் குணம்வந்து சாந்தமானால்
பூலோக மாயையெல்லாம் விட்டதானால்
சுருதியா மனமுருகி நிராசையானால்
சொல்லொணாநுந் தப்பாது சித்தியாச்சு
விறுதாவி லலைந்தலைந்து ஞானம்பார்த்தால்
வேரற்ற மரம்போலே விழுந்துபோமே. (203)

பெரியோர் பெருமை.

வீழ்ந்திறந்து போகின்ற பேரேயல்லால்
மெய்ஞ்ஞானம் வந்தவர்கள் காணாரப்பா
சூழ்ந்திருந்த வண்டமெல்லாஞ் சோதித்தாக்கால்
சுகிர்தவான் கோடியிலே யொன்றுகாணும்
வாழ்ந்திருந்த வுலகத்தே யிருந்தாலுந்தான்
மானிடரி லொருவனடா வறியப்போகா
தாழ்ந்திருக்க தன்மையுற்றுப் பெரியோர்போலத்
தாரணியி லேயிருப்பார் பெரியோர்தானே. (204)

சமயக்கோள்.

தானென்ற கலைக்கியான மறிந்தாலென்ன
தர்க்கமொடு மாயையுற்றால் தவறிப்போகும்
வானென்ற நிராசையுற்று மாயைபோக்கி
மனமுருகிப் பூரணத்தி லன்புசேர்ந்து
கோனென்று யிருந்தவர்க்கு யித்தனையுமெய்தான்
குவலயத்தி லறுசமயக் குருடர்கேட்டார்
தேனென்ற சிவபூசை சத்திபூசை
தெரிந்தவனே சிவயோகி சித்தனாமே. (205)

இந்நூலின்தொகைக்கியன்ற நூலின்பெயர்.

ஆமென்ற சித்தருக்கு மிந்நூல்வேணும்
அப்பனே பூசையிரு நூறும்வேணும்
தாமென்ற தீட்சையிரு நூறும்வேணும்
சாதகமாய் ஞானத்தின் நூறும்வேணும்
ஏமென்ற வாதமிரு நூறும்வேணும்
இயல்பான கொங்கணரைஞ் ஞூறும்வேணும்
வாமென்ற சார்வுக்குச் சட்டநாதர்
வைத்தாரே வெளியாக வாதந்தானே. (206)

கல்வியொழுக்கம்.

வெளியாகச் சொல்லுவரோ வேதநாலும்
வேதாந்தி யானுக்கா லடக்கம்வேணும்
களியாக வுலகத்தே கருவைச்சொன்னால்
கழுதையவன் கரையேற மாட்டான்போபோ
சுளிவாக மனதுள்ளே யடக்கமானால்
சுருதியாஞ் சித்திக்குஞ் சித்தனாவான்
தெளிவாகப் பேசுவதார் சித்தர்பேசார்
திறப்பதார் செடமழிந்த ஞானிதானே. (207)

ஏகபாதவிளக்கம்.

ஞானமென்ன யோகமென்ன இரண்டுமொன்று
நலமறியா மாடுகள்தான் வெவ்வேறென்பார்
பானமென்ன வமுதமென்ன இரண்டுமொன்று
பண்பறியாப் பாவிகள்தான் சுத்தமென்பார்
மானமென்ன ஈனமென்ன ரவிமதிதானென்ன
வையமென்ன வானமென்ன ஆண்பெண்ணென்ன
கானமென்ன வுலகமென்ன சாதியென்ன
கருதிப்பா ரொன்றாகுங் காணுங்காணே. (208)

அறம்பலன்-பாவம்பலன்-சிவயோகம்-பூசைபலன்.

காணுகின்ற தர்மமது செய்வானாகிற்
காசினியி லவனுக்கா மவன்பிதிர்க்குமாகும்
தோணவே பாவத்தைச் செய்வானாகிற்
சொன்னவர்க்கா மல்லாட்டால் சுற்றத்தார்க்காம்
ஊணவே சிவயோகஞ் செய்வானாகில்
உயிரதுதான் மோக்ஷமெய்து முண்மையுண்மை
பூணவே பூசைசெய்தால் சிவத்துக்காகும்
பூசையென்ன மனங்கனிந்தால் புகழுமாச்சே. (209)

அன்பிலார் ஞானக்குறி.

ஆச்சப்பா கனிவல்லோ பூரணந்தான்
அரகரா மனமுருக வருமைமெத்த
காச்சப்பா நின்றதொரு கன்னெஞ்சர்க்குக்
காயசித்தி ஞானசித்தி கடினமாகும்
பூச்சப்பா ஞானிகள்தான் பூலோகத்தில்
பூரணமே தெய்வமென்பான் பூசையென்பான்
பேச்சப்பா மெத்தவுந்தான் படித்துச்சொல்வான்
பேசாமல் மனமுருகாப் பெரியமாடே. (210)

உலகாதியந்தமுடிவறிதல்.

பெருமையென்ன வாழ்வென்ன கீர்த்தியென்ன
பேச்சென்ன மகிழ்ச்சியென்ன பிதிர்க்களென்ன
அருமையென்ன சுகமென்ன கோவிற்குளமென்ன
அதீதமென்ன அரகரா சிவாயமென்ன
உரிமையென்ன வுறவென்ன சங்கற்பமென்ன
உலுத்தமென்ன ஈவென்ன கற்பமென்ன
கருமையென்ன செம்மையென்ன கல்வியென்ன
காசினியில் நரகமென்ன சொர்க்கமென்ன. (211)

என்னவே குருவென்ன சீடனென்ன
இயல்பென்ன வியல்புகெட்டுப் போனதென்ன
வன்னமிகுஞ் சாதியென்ன நீசமென்ன
மாயையென்ன கற்பமென்ன அழிவதென்ன

பொன்னென்ன மனமென்ன சீர்தானென்ன
பொல்லாத தாயென்ன பிறப்பேதென்ன
முன்னென்ன பின்னென்ன முறைதானென்ன
முடிவறிந்தோன் சிவயோகி மூர்த்தியாமே. (212)

மூர்த்தியென்று முத்தியென்று இரண்டுஞ்சொல்வார்
முக்கியமென்பார் சிலதெல்லா மூடர்மூடர்
ஆர்த்தியென்ற பூரணந்தா னல்லாதுண்டோ
யதிற்பிறந்த தைந்துவகை யல்லாதுண்டோ
கீர்த்தியென்ற வகையறிந்த சித்தரானோர்
கிலேசமில்லா ஞானியென்று சிலபேரானோர்
தீர்த்தியென்ற ரிஷியோடு முனிவரானோர்
சிவயோகி யென்றதிரு நாமந்தானே. (213)

ஒடுக்கமுணர்வறிதல்.

திருவுடைய நாமமென்ன சிவயோகந்தான்
செகத்திலுள்ளோர் தெய்வதொன்றுஞ் செம்மையல்ல
அறிவுடைய தாயினுட ஆட்டு ஆட்டு
ஆதியென்ற சிவனாட்டு ஐவராட்டு
கருவுடையோ ரறிந்துகொள்ளு மீதல்லாமற்
காசினியோர் சொல்வதிலே கதையொன்றில்லை
மருவுடைய பூவினுட வாசம்போல
மனமுருகிப் பூரணத்தில் மாளுமானே. (214)

ஆதிவஸ்து—அநாதிவஸ்து.

மாளாம லாண்டிருந்தால் யோகியாச்சு
மார்க்கமந்தப் படிதானே மெய்ஞ்ஞானிக்கும்
ஆளாம லாண்டிருப்பா ரானுந்தாயும்
ஆதிவஸ்து அநாதிவஸ்து ரெண்டுந்தானும்
கேளாமற் கேட்டிருப்பார் நடனவோசை
கிரியையென்ற மனமங்கே புக்கிப்போகும்
வாளான வாழ்வுசிவ யோகவாழ்க்கை
மற்றதெல்லா மாயையென்ற வாழ்க்கையாமே. (215)

நூலின்தொகை வகையின்பம்.

ஆமிந்த இருநூற்றுப் பதினாறுக்குள் [னேன்
அடக்கிவைத்த பொருளெல்லாம் வெளியாய்ச்சொன்
ஓமிந்த வுலகத்தி லிந்நூல்கிட்டில்
உலகத்திற் சித்தரதிக முண்டாய்ப்போச்சு
நாமிந்த சூத்திரத்தைக் கெணியாதிருந்தால்
தலைதெறித்துப் போகுமடா சத்தியஞ்சொன்னேன்
நாமிந்தப் படிசொன்ன யோகிக்கீய்வாய்
நலமான பூரணசூத் திரந்தான்முற்றே. (216)

அகஸ்தியர் பூரணசூத்திரம் உம்பெறு.